விவேகபாநு.

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு—திருக்குறள்.

வால்யூம் I] மார்ச்சுமீ 1-உ [புத்தகம் 7

சமதிருஷ்டி.

சாதாரணமாய் ஜனங்களுக்குப் படிப்பது லகுவாயும் நடப்பது பளுவாயுமிருக்கின்றது. எச் சாஸ்திரத்தை யேனும் சிறிது முயன்றால் ஒருவன் கற்றுக்கொள்ளக் கூடும். அதிற் கூறியவண்ணம் நடக்கவெனிலோ, நீடித்தகாலம் விடாது பயில வேண்டியதிருக்கின்றது. ஒழுக்கத்திற் சிரத்தை வைக்காது தாம் அடைந்திருக்கும் வெறும் படிப்பிலேயே திருப்தியடைகின்றோர் அநேகர். அன்னோர் படிப்பின் பிரயோஜனம் ஒழுக்கமென அறிகின்றிலர், படிப்பின் பலவகைப் பிரிவுகளையும் நாம் ஆராய்வோமாயின் அவையாவும் இரண்டினிலடங்குமெனச் சந்தேக மறக்கூறலாம். அவ்விரண்டும் மெய், பொய் என்பனவேயாம். அவற்றுள் பொய்ப்படிப்பாவது பொருளல்லாததைப் பொருளெனக் கிரகிக்கச்செய்வது. எங்கும் நடைபெறுவதாயினும், இஃது யாதொரு பிரயோஜனத்தையும் தரத்தக்கதன்றாதலின், இதனைவிடுத்து மற்றதனைப்பற்றிப் பேசுவாம். அஃது உள்ளதை உள்ளவாறு கிரகிக்கச்செய்வது. அஃது புறத்திலிருந்தும் வருவதொன்றாயினும், எந்நிலையில் நிற்கும் மாந்தர்கட்கும் அகத்திலும் தானே நிகழ்வதொன்றாயிருக்கின்றது.

"உன்னைப்போல் பிறனையும் நேசிப்பாயாக" இந்நீதி வாக்கியம் பூர்வீக மஹான் ஒருவரால் கூறப்பட்டுள்ளது. இஃது உண்மையை உணரச்செய்யும் ஓர் வாக்கியமன்றோ? ஆம். உண்மையை விளக்குவ தொன்றேயாம். என்னை? மனிதர் பொதுவாய்த் தோற்றத்தையே பொருளெனக்கொண்டு மருண்டு, இராகம், துவேஷம் என்பவற்றிற் குள்ளாகி, கர்மத்தால் பந்திக்கப்பட்டு ஜென்மத்திற் காளாகின்றனர். தோற்றத்தை வைத்துக் கணிப்பதானால் பொருள்கள் பலவென்றே கொள்ளற்கிடையாகும். அங்ஙனம் கொள்ளுங்காலும் அவை துக்கத்திற்கே ஏதுவாகும். பொருள்கள் பலவெனக் கொள்ளுமறிவு பொய்ப்படிப்பினா லுண்டாகின்றது. எதார்த்தத்தில் அவையாவும் ஒன்றே.

"மண்ணினுறு விகாரமுமம் மண்ணேயந்த மண்ணொழித்துப்
பண்ணினரும் பிறரில்லை பண்ணப்பட்ட பலபொருள்க
ளெண்ணினுரு வதன்முன்பு மிறந்தபொழுது நிகழ்விடத்துங்
கண்ணினொடு மண்ணொழியக் கண்டாருளரோ கட்டுரைப்பாய்".

(இதன் பொருள்:— மண்ணினுள்ளவாகிய கடமுதலிய விகாரங்களனைத்தும் (காரணமான) அம்மண் மாத்திரமேயாம்; (எதனாலெனின்?) காரணமான அம்மண்ணைத் தவிர்த்துப் (கடமுதலிய விகாரங்களைப்) பண்ணினவரும் அன்னியரில்லை, மண்ணினும்

பண்ணப்பட்ட (கடமுதலிய) அநேக விகாரங்களையும ஆலோசிக்குமிடத்து உண்டாதற்குமுன்னும், நாசமானபின்னும், மத்தியிற்றோன்றுங் காலத்தும் கண்ணினுல்பார்த்து (அவற்றில்) மண்ணைத்தவிரக் கண்டவருண்டோ? உறுதியாகச்சொல்லுதி) என்று ஸ்ரீ பகவான் கூறியிருத்தல்காண்க. இதனுல் நாம் கிரகிப்பது யாதெனில், எங்ஙனம் மண்ணின் விகாரங்களாகிய சட்டி, குடம் முதலியவைகள் தோற்றத்தில் பலவிதமாயிருப்பினும் எக்காலத்தும் அவற்றின் முதற்காரணமாகிய மண்ணுகவேயிருக்கின்றனவோ அங்ஙனமே இப் பிரபஞ்சத்தின்கண் நானுவாகத்தோற்றும் பொருள்கள் யாவும் அவற்றின் முதற்காரணமாகிய சிவமாகவே யிருக்கின்றனவென்பதே. இதுவே யுண்மையாதலின் அக்கீதிவாக்கியம் கூறப்பட்டதென்றறிக.

அன்றேல் மற்றெக்காரணமும் பொருந்தாதென்க. என்னை? அவரவர் சுகத்தையே அவரவர் கருதவேண்டியவராயிருத்தலின்.

இஃதே யுண்மையாயினும் பிரதிபந்தகத்தால் மறைக்கப்பட்டிருக்கின்றது. திருஷ்டாந்தமாக, ஒருவன் தன்னுடைய புத்திரனைப் பணம் சம்பாதித்தற்பொருட்டுச் சிறுவயதிலேயே இலங்கைக் கனுப்பிவித்தானென வைத்துக்கொள்வோம். அம்மகன் தன்வரவை முன் கூட்டித் தெரிவிக்காமல் இருபது வருடம் கழித்துத் திரும்ப வரும்பொழுது தகப்பனூரல்லாதமற்றோரூரில் இருவரும் சந்தித்தாரகளெனவும வைத்துக்கொள்வோம். வெகுகாலம்பிரிந்திருந்ததால் தகப்பன்மகனை இன்னனென அறியாதிருத்தல்கூடும். அதுமாத்திரமன்று; அச்சமயத்தில்(காரணமுண்டாயின்)அவனோடு துவேஷித்து அவனுக்கு விரோதமாய் எப்பிரவர்த்தியும் செய்தலுங் கூடும். ஆனால் தனக்கும் மற்றவனுக்குமுள்ள சம்பந்தத்தைத் தகப்பன் அறிவானாயின் அவனுக்குச் சுபாவமாயெழும் அன்பினுல் நேசித்தலே பொருந்தும். அதுபோலவே ஜீவர்கள் யாவரும் ஒரே காரணப்பொருளின் தோற்றங்களாயிருத்தலையும் அதனுலொருவருக்கொருவருள்ளசம்பந்தத்தையும் மனிதர் உணர்வாராயின் சகல ஜீவராசிகளையும் தங்களைப்போலவே நேசித்தல் அவர்க்குச் சுபாவமாகவே யெழும்.

இவ்வுண்மையை யுணர்ந்து, அவ்வாறொழுகின் இன்பமே ஜனித்தற்கேதுவென்பதும் மேற்கூறிய திருஷ்டாந்தத்தால் நாம் காண்கின்றோமன்றோ?

இஃது புறத்திலிருந்தே கிரகிக்கற் பாற்றோவெனின், அற்றன்று. இதனையுபயோகிக்கத்தக்க சந்தர்ப்பங்களில் இவ்வுண்மை பலருடைய மனதிற்றோன்றவே செய்கின்றது. தோன்றினும் அவ்வாறு நடக்க முயற்சிக்கின்றிலர். அதனைப் பலர்க்குபதேசிக்கவோ தயாராயிருக்கின்றனர். என்ன ஆச்சரியம்!

காரணம் இன்னதென உணராராயினும் எச்சமயத்தவரும் "தன்னைப்போல் பிறரையும் பேண்" என்றே உபதேசிக்கின்றனர். என்னை? இச் சமதிருஷ்டியே, யாவற்றினு மேலான ஒழுக்கமாதலின். இதனை யுடைத்தாயிருத்தலே மேலான நிலையென சமத சுருதிகள்யாவும் கோஷிக்கின்றன. தற்பொழுதும் இதனையுடையவரே ஒழுக்கத்திற் சிறந்தவரென யாவரும்புகழ்கின்றனர். இதனை நன்குணர்த்துமாறு,சில வருஷங்களுக்குமுன் நடந்த ஒருசிறிய விஷயத்தை அடியில் வரைகின்றோம். அஃதாவது:—

சோழ நாட்டின்கண்ணுள்ள ஓர் கிராமத்தில் ஜனங்கள் குடியிருந்த ஒரு தெருவழியாய்ச்சென்ற சாதுவொருவர் தற்செயலாய் துன்மார்க்க னொருவனுடைய காலை இடறினர். அவன் கோபாவேசங்கொண்டு, சிறிது மிரக்கமின்றி, அச்சாதுவை யடித

தாம். அதனால் அவர் மூர்ச்சித்துப் பூமியில்விழவே அங்கிருந்த சிலர் அவர்மீது இரக்கங்கொண்டு, அவரை மூர்ச்சையினின்றும் உயிர்ப்பிக்கப்பல உபாயங்கள் செய்ததின்மேல் அவருக்கு ஸ்மரணையுண்டாவதாகக் கண்டார்கள். அப்பொழுது அவருக்குச் சிசுருஷை செய்தவர்களில் ஒருவன் அவரைப்பார்த்து "சுவாமி! தங்களுக்கிப்பொழுது பணிவிடை செய்பவன் யாவன் என்றறிகின்றீர்கள்?" என்று வினவினான். அதற்குச் சாதுவானவர் "எவன் என்னை அடித்தானோ அவன்தான் இப்பொழுது சிசுருஷையும்செய்கிறான்", என்றார் என்பதே.

நண்பர்களே! பார்த்தீர்களா? அச்சாதுவானவர் உருவத்தை மதித்திருப்பாராயின் அவ்விருவரையும் ஒருவனாகக் கொள்ளுதல் எங்ஙனம் கூடும்? சகலதோற்றங்களிலேயும் வியாபித்து அவை கட்கெல்லாம் ஆதாரமாயிருக்கும் பரம்பொருளினிடத்திலேயே நாட்டமுடையவராயிருந்ததினாலன்றோ அவர் அங்ஙனம் கொள்ளற்கு இடையாயது? ஒருவன் செல்வவானாயிருக்குங்கால் பலர் அவனை நேசிக்கின்றனர். அவனே கர்மவசத்தால் வறியனானவனேல் யாவரும் வெறுக்கின்றனர். தனது ஸ்திரீயானவள் சுந்தரமாயிருக்குங் காலத்தில் புருஷன் அவளை நேசிக்கிறான். ஆனால் ரோகத்தினாலோ வேறெவ்விதக் காரணத்தினாலோ அவளுடைய சௌந்தரியம் குன்றுமேல் புருஷன் அவளை வெறுக்கிறான். இவையெல்லாம் எதார்த்த திருஷ்டியில்லாக் குறையாலன்றோ சம்பவிக்கின்றது. நிலை பேதத்தினால் அவ்விருவரிடத்திலுமுள்ள உண்மைப் பொருள் மாறுதலடைவதுண்டோ? இன்றாதலின் எவரும் எதார்த்த திருஷ்டியையுடைத்தாயிருப்பாராயின் இராகத்வேஷத்திற்கும், அவற்றால் வினையும் துக்கத்திற்கும் ஆளாக வேண்டுவதின்று. இவ்வுணர்வினாலேயே யாவரும் குற்றமற்ற சமதிருஷ்டி வாய்க்கப் பெறுவர். இச் சமதிருஷ்டி சுய நயத்திலிருந்து முளைத்து, குடும்பத்தைத் தழுவுதல், பந்துக்களைத் தழுவுதல், மித்திரரைத் தழுவுதல், சுவகோத்திரத்தாரைத்தழுவுதல், சுவதேசத்தாரைத் தழுவுதல், அன்னிய தேசத்தாரையும் தழுவுதல், மனிதவர்க்கத்தையே தழுவுதல், ஊர்வன, நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன வாதிய யாவற்றையுந் தழுவுதல் என வளர்ந்து, மோக்ஷம் என்னும் பலனைக்கொடுக்கத் தக்கதாயிருக்கின்றது.

இதுபற்றியன்றோ,

"நன்றேஞான வருமறையோ னன்றுயர்ரா விரைச்சிறுமைத்
தின்றேயுழலு மவனியானை யாவென்றிந்தத் திறதலெல்லா
மன்றேயென்னு தாமென்னு தறிவாய்நின்ற வெனையெங்கு
மொன்றேயாகக் காண்பானிவ் வுடம்போடிருந்தே யுடம்பறுப்பான்".

(இதன் பொருள்:—நல்ல வித்தை, விநயங்களையுடைய பிராமணன், ஆனை, பசு, கல்லசுவானம், அந்நாய் மாமிசத்தைப் புசித்துழலா நிற்கும் சண்டாளன் என்று சொல்லப்படுகின்ற இக்கூறுபாடுடையனவான சாத்துவிக, இராஜத, தாமத குணங்களையுடைய பிராணிகளிலெல்லாம் ஒன்றிலிலன் ஒன்றிலுளன் என்றுபாராமல் எவ்விடத்தும் சச்சிதானந்தமாய் நின்ற என்னைச் சமமாகவே பார்க்கும் ஞானவான் இத்தேகத்தோடு கூடிச்சீவிப்பவனாகவிருந்தே ஜனன மரணங்களைச் சயித்தவனாகின்றான்)என்று பகவத்கீதையில் ஸ்ரீ பகவான் கூறியிருக்கின்றார்?

ஆதலின் ஒவ்வொருவரும் இவ்வுண்மையை யுணர்ந்து, உணர்ந்த வாறொழுகு தற்கான முயற்சி செய்து, சமதிருஷ்டியை யுடையவர்களாய், இம்மையில் அவரவர்செய்து முடிக்கவேண்டியிருக்கும் கடமைகளைச்செய்து முடித்து, சுகமாக வாழக்கடவர்.

நிர்ப்பயம்.

இப்பிரபஞ்சத்தில் மேலான ஜன்மத்திலுற்பத்தியான மாந்தர்களுக்குக் கடவுளைக் காண வேண்டுமென்ற அபேக்ஷை உண்டாதல் மிகவும் அருமையாயிருக்கிறது: அவ்விச்சை சிலருக்குண்டாயினும், அவர் தம் எண்ணம் நிறைவேறுமாறு அப்பியசிக்கவேண்டிய குணங்கள் இன்னின்னவையென விசாரித்துணராது, அசுரகுணத்தையே மேவி, ஜனன மரணச் சக்கரத்திற் சுழன்று துக்கத்திற் காளாகின்றனர். ஐயோ! இதென்ன பரிதாபம்! அத்தகைய மாந்தர், அப்பியாசிக்கவேண்டிய குணங்களெல்லாம் பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவானால் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. அக்குணங்களை மேவாது, ஒருவன் கற்பகோடிகாலம் எவ்விதமுயற்சி செய்யினும் கடவுளைக்காணுதலில்லை யென்பது திண்ணம். ஆனால் அவைகள் ஒரேகாலில் அப்பியாசத்திற்குக் கொண்டுவரத் தக்கன வல்லவென்றாலும், காலடைவில் சாதிக்கப்படத்தக்கவைகளேயாம். அதற்குப் பொறுமையும் விடாமுயற்சியும் இருக்கவேண்டிய தாவசியகம். அவ்வித நற்குணங்களை மேவி உயர்ந்த நிலையை அடையுமுன், அநேகவருடங்கள் சென்றாலும் செல்லும். அன்றிப் பல ஜன்மங்கள் வந்தாலும் வரும்.

மனிதர்கள், எக்குணத்தையும் அப்பியாசிக்க முயலுமுன்னர் அதனால் விளையும் நன்மை தீமைகளை ஆராய்ந்து, நன்மை பயக்கத்தக்கதாயிருப்பின் அதனைக் கைக்கொள்ளல் வேண்டும். அதாவது, அக்குணத்தில் பழகத்தக்கதாய்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதனை விடாது தழுவுதலென்பதே. இனி, நாம் அப்பியாசிக்க வேண்டிய குணம் என்னவெனில், நிர்ப்பயமென்றே சொல்லலாம். ஏனெனில், அதனால் சுகம் விளைகின்றது. பயத்தினால் துக்கம் விளைதல் யாவர்க்கும் பிரத்தியக்ஷமன்றோ? ஆதலின், இதனைக்கைக்கொள்ளுதல் எவர்க்கும் உசிதமே. நிர்ப்பயத்தை ஒருவன் பழக முயலுவதாவது பயத்தை யொழிக்க முயல்வதே யாதலின், அதனைப் பற்றிச்சிறிது விசாரிப்பாம். பயம் என்பது எப்போதும் அறிவீனத்தை முன்னிட்டே வருகின்றது. சில மூடர்களும் நிர்ப்பயமாய்க் காரியங்களைச் செய்கிறார்களேயென்றால், அவர்க்குச் சிலகாரியங்களில் பயமில்லாததாகக் காணப்படுகின்றதேதவிர, அவரைப் பயப்படுத்தத் தக்க விஷயங்கள் பலவுண்டாயிருக்கலாமென்பது திண்ணம். இது நிற்க, பயத்துக்கேதுவான விஷயங்கள் பலவுளவேனும், அவற்றுள் முக்கியமானது மரணமே. இது யாவரையும் பயப்படுத்துகின்றது. ஒவ்வொருவரும் தன்னைச்சரீரமாகப் பாவித்திருத்தலின், அஃதடையும் விகாரங்களுள் ஒன்றாகிய மரணத்தையும், தானடைவதாகக் கருதிப் பீதியடைகின்றனர். ஊன்றி யாலோசிக்குங்கால், புருடன் என்பவன் புலால் சட்டையாகிய சரீரமா? இல்லை; புருடன் என்பது ஆத்மா, அவனுக்கு ஆதியுமில்லை; அந்தமும் இல்லை. அதாவது பிறப்புமில்லை; இறப்புமில்லை. "அக்கினி அவனை எரிக்கமுடியாது. தண்ணீர் அவனை நனைக்கமுடியாது. அவனுக்கு மரணமென்பது எக்காலத்திலுமில்லை" ஆத்மா ஒரு நூல்போலவும், சரீரங்கள் அதில் கோர்க்கப்பட்டிருக்கிற மணிகள் போலவுமிருக்கின்றன. "புணர்ந்தன பிரியும், பிரிந்தன புணரும்" என்றிருத்தலின், பல அணுக்களின் சேர்க்கையான சரீரம், திரும்பவும் அணுக்களாகப் பிரிக்கப்படும்.

ஆத்மாவோ அங்ஙனம் சேர்க்கைப்பொருளாய தொன்றன்று, சூக்ஷ்மங்கட்கெல்லாம் சூக்ஷ்மமாயது, எங்கும் நிறைந்தது. சத்தியமாயுள்ளது. இதற்கன்னியமாய் வேறுபொருளிருத்தல் சுருதி, யுக்தி, அனுபவங்கட்கு விருத்தமாதலின், நாமும்

அதனால் விழுங்கப்பட்டவர்களாதல் வேண்டும். சுருக்கிச்சொல்லின், தோற்றத்தில் பலவாயிருப்பினும், நாமெல்லோரும் யதார்த்தத்தில் ஆத்மாவாகவே யிருக்கின்றோம். இந்த நிச்சயம் ஒவ்வொருவருக்கும் பசுமரத்தாணிபோல் மனதிற்பதிந்து விட்டால், சரீரம் அழியாமலிருக்க வேண்டுமென்கிற எண்ணமும், அது அழிவதாலுண்டாகும் பயமுமிராது. ஆகவே அழிவு என்பது சரீரத்திற்கே உரிய தென்றும், நாம ஆத்மாவென்றும், ஆத்மாவுக்கு மரணமென்பதே யில்லையென்றும் அறிகிறோம். நம்மைச்சரீரமென்று எண்ணியிருந்த அறிவீனமே இப்பெரியபயத்திற் கேதுவாயிருத்தலின், அதின் நீக்கமே அதாவது மெய்யறிவே நிர்ப்பயத்துக் கேதுவாகும். ஆகையாலினி நாம், நித்தியானந்த ஆத்மா என்று சதா அப்பியாசித்து, அநுபவத்திற்குக் கொண்டுவந்து, மரணமென்பதினாலுண்டாகும் பயத்தை வேரறுத்து, நிர்ப்பயமுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

மற்றொருபயம், பிரிதலினாலுண்டாகின்றது. அதாவது, நாம் நேசித்த மனைவிமக்களையோ அல்லது சிநேகிதர்களையோ விட்டுப்பிரிவ தென்றால் பயப்படுகிறோம். அவர்களை விட்டுப் பிரிவதைப் பார்க்கிலும் உயிரிழத்தல் நலமாக எண்ணுகிறோம்.

இங்ஙனம் ஒவ்வொருவருக்கும் அவரவர் நேசித்ததைவிட்டுப் பிரிதல் என்றால், பயமும் அதனால் துக்கமும் உண்டாகிறது. சாதாரணமாய் அன்பு எதாவது ஒரு சம்பந்தத்தை வைத்தே உற்பத்தியாகின்றது. தாய்க்குக் குழந்தையின் பேரிலும், புருஷனுக்கு மனைவியின்பேரிலும் அன்பு உண்டாகிறதை நாம் பார்க்கிறோம். இவ்விடத்திலன்பு இருவர்களுக்குமிருக்கும் சம்பந்தத்தைப் பற்றியே யல்லது வேறல்ல. இச்சம்பந்தம் தோற்றத்தை முன்னிட்டதேயன்றி யதார்த்தமாயுள்ளதல்ல. ஆத்மாவோ, இவைகள் எல்லாவற்றிலும் நிறைந்து ஒன்றும் அழியாததாயிருக்க, அதனை நோக்காது அழியும்படியான ஜடப்பொருளில் அறியாமையால் அன்புவைப்பதால், அவை நீங்கும்போது துக்கமுண்டாகிறது. ஆகையால் தாய், குழந்தை, உறவினர், சிநேகிதரென்னும் அபிமானத்தால் எழும் அன்பின் வசப்பட்டுத் துன்பத்திற்காளாகாமல், சர்வ வியாபகமாயிருக்கும் பரமாத்மாவின் மேல் அன்பு வைக்கவேண்டியது. அது தான் உண்மையான அன்பு. அது வளரவளரப் பிரிதலென்பதே யில்லாமல் எங்கும ஆத்மாகாரமாய் விளங்குமாதலால் பயமென்பதேயிராது. இதன் உண்மையை நன்கு அறிய விரும்புவோர் மகான்களின் சரிதையைப் படித்தால் சந்தேகமறத்தெளிந்து கொள்ளலாம். அவர்களுடைய திருநாமங்களை உள்ளத்தில் வைத்து நாமெல்லோரும் மேலேசொன்ன அன்பில் வளருவோமாக.

மூன்றாவது, சம்பத்தையிழந்துவிடுவோமென்று பயப்படுகிறோம். அதாவது, செல்வம், கீர்த்தி, அந்தஸ்து முதலான சம்பத்தெல்லாம் போய்விடுமேயென்று பயமுண்டாகிறது. அவையெல்லாமும் இவ்வுலகத்தைச் சேர்ந்தவை. உலகமோ நிலையில்லாதது. ஆகையால் அவைகளும் நிலையில்லாதவை. விவேகிகளுக்கு அவைகளிற் சிறிதேனும் பற்றிராது. அவைகளை யிழந்து விடுவதால் உண்டாகும் பயம் அவைகளிற்பற்றிருக்கும்போதுதான் உண்டாகிறது. பற்றொழித்தால் பயமும் ஒழியும்.

"அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே" என்றும்
"கூத்தாட்டவைக் குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று" என்றும்

பெரியோர் கூறிய முதுமொழிகளைக் கைக்கொண்டு, சம்பத்தாதிகளில் பற்று என்பது சற்றுமில்லாது அவைகளை யிழந்து விடுவோமென்ற பயத்தை யொழிப்போமாக.

இப்போது பயம் எவ்வழிகளில் நம்மைச்சேருகிறதென்று நாம் அறிந்தோமல்லவா? உலகத்தில் தோன்றும் பற்பல பொருள்களின் யதார்த்தத்தன்மையை மறைக்கும் அஞ்ஞானம் நம்மிடத்தில் மிகுந்திருப்பதால்தான் நமக்கு நானாவிதமான பயமுண்டாகிறது. நமக்குச் சந்தோஷம் எப்போதுண்டாகிறதென்று கவனிப்போமானால், மரணம், பிரிதல், சம்பத்திழத்தல், என்றவெண்ணங்களை நாம் மறந்திருக்கும்போதென்று தெரிகிறது. எவ்வளவு நேரம் அவைகளை மறந்திருப்போமோ அதாவது மனதிலிருந்தெடுத்து விடுவோமோ, அவ்வளவு நேரம் சந்தோஷமிருக்கிறது. எப்போதும் மறந்திருந்தால் சதா ஆனந்தமாயிருப்பதில் தடையென்ன? ஆகையால், ஆத்மஸ்வரூபத்தை உய்த்துணர்ந்து அதாவது ஆத்மா, சத்து, சித்து, ஆனந்தமென அறிந்து, சேர்க்கைப்பொருளல்லாததால் அதற்குக் காலத்திரயத்திலும் மரணம் என்பது இல்லையென்றும், எங்கும் வியாபித்திருப்பதால் பிரிதலென்பதில்லை யென்றும், சம்பதெல்லாம் மின்னொளியை யொத்ததென்றும், சதாகாலமும் அப்பியாசித்து, பயத்தைப்புறக்கடித்து, பரமசுகமாகிய கடவுளைக்கண்டு, சரீரமுள்ளவரையில் அவரவர்கடமையை வழுவின்றிச் செய்துமுடிப்போமாக.

M. கிருஷ்ணசுவாமிமுதலியார்.

"நான்கு குருடர்கள் யானையைப் பார்க்கச் சென்றார்கள். அவர்களில் ஒருவன் அதின் காலைத்தடவி யானை தூண் போலிருக்கிறதென்றான். இன்னொருவன் தும்பிக்கையைத் தடவிக்கொண்டு யானை உலக்கையைப் போலிருக்கிறதென்றான். இன்னொருவன் அதின் வயிற்றைத் தடவிக்கொண்டு யானை தொட்டி போலிருக்கிறதென்றான். மற்றொருவன் அதின் காதுகளைத் தடவிக்கொண்டு யானை சுளகுபோலிருக்கிறதென்றான். இவர்களுக்குள் யானையின் ரூபத்தைப்பற்றித் தாவாவுண்டாயிற்று. அவ்வழியே சென்ற ஒருவன் அவர்கள் சண்டையிட்டுக்கொள்வதைக்கண்டு "எதற்காக அடித்துக் கொள்கிறீர்கள்" என்று கேட்டான். தங்களுடைய தாவாவை அவனிடஞ்சொல்லி அதைத்தீர்த்து விடும்படி அவர்கள் கேட்டார்கள். அவன் இவர்களை நோக்கி "உங்களில் ஒருவராயினும் யானையை நன்றாய்ப் பார்க்கவில்லை, யானை தூண்போலில்லை; அதின் கால்கள் தூண் போலிருக்கின்றன. அது தொட்டிபோலுமில்லை; அதின் வயிறு தொட்டி போலிருக்கிறது. அது சுளகுபோலுமில்லை; அதின் காதுகள் சுளகுபோலிருக்கின்றன. அது உலக்கைபோலுமில்லை; அதின் தும்பிக்கை உலக்கை போலிருக்கின்றது. இதெல்லாம் சேர்ந்தது யானை" என்றான். இது போல பகவானை ஒருரூபத்தில் பார்த்தவர்கள்தான் சண்டைபோடுகிறார்கள்"

*
**

"ஒவ்வொரு ஜீவனும் நாராயணன்தான். மனிதனும், மிருகமும், ஞானியும், சண்டாளனும், பிரபஞ்சமும் யாவும் நாராயணன் தான்"

ஈகை

ஈகையாவது புண்ணியச்செயல்களிலொன்று. அது செல்வமுடையரால் வறியராயுள்ளோர்க்குக் கொடுக்கப்படுங் கொடையாம். ஆயினும் அது ஏற்போரது தரத்தின் வேறுபாட்டால் தானம், தருமம், என இருவகைப்படும். இவற்றுள் "தானம்" மாவது பொய்சொல்லாமை, கொலைபுரியாமை, பிறர்மனைநயவாமை, வரைவின் மகளிர் மயலாமை, களவுசெய்யாமை, புலாலுண்ணாமை, கள்ளருந்தாமை (கள்ளருந்தாமை என்பதில் அதனோடு சாராயம், பிராந்தியாதியனவும், அபின் கஞ்சாவாதியனவுமாகிய மயக்கத்தைத் தரும் வஸ்துக்களனைத்துமடங்கும்) முதலிய நற்குண நற்செய்கையுடையவராய் வேத சிவாகமங்களில் விதித்தவாறு வழுவா தொழுகும் நல்லறிவுடையவர்களுக்கு அன்னோர் வருந்திக்கா திரவண்ணம் இன்சொற்பகர்ந்து முகமலர்ச்சியோடு தமது தகுதிக்கும் ஏற்போரது தகுதிக்கும் ஏற்பப் பொருள் பண்டமாதியன வற்றை யளித்தலாம். "தருமம்" மாவது பொருள் சம்பாதித்துண்ணுதற்கு எவ்வாற்றானு மியலாத விருத்தர், பாலர், அநாதைகள், முடவர், குருடர், வியாதியாளராதியோர்க்கு அன்னமளித்தல், ஆடை கொடுத்தலாதியனவாம். அன்றியும் வழிப்போக்கர்களின் பொருட்டுச் சாலையமைத்தலும், தண்ணீர்ப்பந்தல் வைத்தலும், அன்ன சத்திரங்கட்டுதலும், கிணறு குளந்தோண்டுதலும், வியாதியாளரின் பொருட்டு வைத்தியசாலை நிருமித்தலும், கல்விசாலை தாபித்து ஏழைப் பிள்ளைகளையும் அநாதைப்பிள்ளைகளையும் வேதனமின்றிக் கற்குமாறு செய்தலுமாகிய இதனோ டொப்பனவுந் தருமமெனப்படுவனவாம். சற்பாத்திர (நற்குண நற்செய்கையுடையோ) ரல்லாதார்க்கும், உழைக்கவல்லவர்க்கும், பொருள் தேடி யுண்ணப் போதிய ஆரோக்கிய சரீரியாயிருந்தும் அங்ஙனஞ் செய்யாது சோம்பேறியாய்த் திரிவார்க்கும், வேடமாத்திரையால் தம்மை ஞானிபோற்காட்டித் தமதெண்ணம் முற்றிய பின்னர் இழிதொழில் புரிந்து திரியும் கபடநாடகதாரர்க்கும் தானதருமம் செய்வது உவர் நிலத்தில் நன்னெல் விதைப்பினும் அது ஒருவாற்றானும் பயன்தராவாறு போலப் பயனின்றியொழிவதேயாம். அன்றியும், தானமேற்ற பொருள், பண்டமாதியனவற்றைத் தாமநுபவியாது பிறர்க்கு விற்றலும், அவைகொண்டு கள்ளுண்ணல், சூதாடல், வியபிசாரஞ்செய்தலுமாதிய நீச்தொழில் புரியும் புன்மக்களுக்கீதலினால் அவரானெய்தும் புண்ணியப்பயனை யடையாது போவதோடொழியாது அப்பொருள்கொண்டு தீயகருமஞ் செய்யப்பட்டமையால் அது பாவத்தையே பிரதிபலனா யளிக்குமென்க. இக்கருத்துப்பற்றியே,

"தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கோர்க் குதவார் விழுமியோர்—எக்காலு
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்"

எனப்பெரியோர் திருவாய் மலர்ந்தருளியதுமாம். இனி, சற்பாத்திரராயுள்ளோர்க்களிக்கும் பொருளானது சிறியதாயினதாயிருப்பினும் அவைகொண்டு நற்கருமமே செய்யப்படுமாதலின் அது ஒன்றுக்குப் பலமடங்காய்ப் புண்ணியத்தையே பிரதிபலனா யளிக்க வல்லதாம். இக்கருத்துக் கொண்டே,

"உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
யிறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்"

என ஆன்றோரருளியதுமாம். இனிச் செல்வர்களிற் பலர் சற்பாத்திரராயுள்ள வறியார் நற்கருமஞ் செய்தற்பொருட்டுப் பன்னெடுநாள் தங்கள் கடைவாயில் காத்திருப்பினும் அவர்களைச்சிறிதுங் கடைக்கண்ணாற் பாராது புறக்கணித்துவிட்டு, போதியசெல்வமுடையோர்க்கும், அதிகாரிகளுக்கும், அவர்தம் மனையகத்து நிகழப்பெறும்மங்கலகாரியத்தின் பொருட்டும், மற்றேனையவற்றின் பொருட்டும் அன்னோர் விரும்பியவண்ணம் விலித்து பொருளளித்து அதுவே புண்ணியச்செயலெனத் தமதீனமதியிடைக்கொண்டு இறுமாந்திருக்கின்றனர். இங்ஙனம் செய்வது எங்ஙனம் புண்ணியமாம்.

"வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து"

எனப் பொய்யாமொழிப்புலவர் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் அன்னோரது நட்பையும், பிரதிபிரயோசனத்தையும், இடம்பத்தையுங் கருதிச் செய்யப்பட்டதாய் முடியுமேயன்றி எஞ்ஞான்றும் புண்ணியச்செயலாய் முடியாதென்பது திண்ணம். இனி, சிலசெல்வர்கள் உயர் வருணத்தவர்க்குத் தானதருமஞ் செய்தலே புண்ணியமெனவும், தாழ்ந்தவருணத்தவர்க்கு அங்ஙனம் செய்தல்புண்ணியமாகாதெனவுங்கொண்டு, அவ்வோர் வருணத்தார்க்கே ஒவ்வொருவரது குணகுணங்களையும் நன்கறியாது, யாவரையும் சமமாய்க்கொண்டு தானதருமஞ் செய்கின்றனர். உயர் வருணத்திற் பிறந்தார் யாவரும் வறியருமல்லர். மற்றை வருணத்தவர் யாவரும் செல்வருமல்லர். உயர் வருணத்திற் பிறந்தார் யாவரும் நல்லொழுக்கமுடையவருமல்லர். மற்றைய வருணத்தவர் யாவரும் தீயொழுக்கமுடையவருமல்லர். ஓர்வருணத்திற்பிறந்தார் அனைவரும்பொருள் தேடியுண்ணச் சக்தியற்றவருமல்லர். மற்றைய வருணத்தவரனைவரும் பொருள் தேடி யுண்ணப்போதிய சக்தியுடையவருமாயிரார். செல்வம் வறுமைகளும், நல்லொழுக்கந் தீயொழுக்கங்களும், பொருள்தேடும் வலியுண்மை இன்மைகளும் எல்லாவருணத்தவருள்ளும் உண்டென்பது யாவராலும் மறுக்கொணாதது. ஆதலால் ஓர் வருணத்தவருக்குத் தானதருமஞ்செய்தலே புண்ணியமாமென்றும் மற்றையோர்க்கு அங்ஙனம்செய்தல் புண்ணியமாகாதெனவும் சிந்தித்தல் மரபன்றாம். உயர்வருணத்தவனாயினும் நற்குணம் நற்செய்கையிலாதவனை இழிகுலத்தவனாகவே கொள்ளவேண்டும். இழிகுலத்திற்பிறந்தோராயினும்நற்குண நற்செய்கையுடையவராயிருப்பின் அவரை உயர்வருணத்தவராகவே கொள்ளவேண்டும். உயர்வு, தாழ்வு, அறிவு செய்கையாதியனவற்றாலன்றி குலத்தினாலோர் போதும் உண்டாகா. அது

"ஆக்க மறிவா னலது பிறப்பினுன்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க — தீக்கு
பவரா ரரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு"

என்னும் அருமைத்திருவாக்காற்பெறப்படும். ஆதலால் தானதருமங்களைவற் போராது குணகுணங்களை நன்கறிந்து எவ்வருணத்திற்பிறந்தவராயினும் சற்பாத்திரராயுள்ளார்க்குச் செய்தலே புண்ணியமாமன்றி ஓரோவருணத்தவர்க்கே செய்யவேண்டுமென்று நினைப்பதும், அங்ஙனம் செய்வதும் புண்ணியமாகாவென்பது நிச்சயமாம். இனி, சிலர் 'தானதருமஞ்செய்தலால் யாதும் பயனின்று; மென்மேலும்பொருள் தேடுதலும், உண்ணலும், உடுத்தலும், மாதரோடிருந்து துய்த்தலுமே இப்பிறவியாலாய பய'னெனக்கொண்டொழுகின்றார்கள். இதுமற்றெல்லாவற்றினும் பெரும்பேதமையாம். நித்தியமான

புண்ணியத்தைத் தருஞ்செயலாகிய தானதருமஞ் செய்தல் பயனற்றதெனவும் அநித்தியமான பொருள் தேடுதலும், அநித்தியமான காமவின்பம் நுகர்தலுமே பயனுற்றதெனவும் கொள்வது எத்துணை மதியீனம்!

"நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நிலையாகு—நீரில்
எழுத்தாகும் யாக்கை"

என்னும் அருமைத்திருவாக்கின் வண்ணம் தோன்றியழியுந்தன்மைத்தானநிலையிலாப் பொருளாதியனவற்றை நித்தியமெனக்கொண்டு நித்தியமான புண்ணியகருமத்தைச் செய்யாதிருத்தல் மரபன்றாம்.

"அறஞ்செய்ய விரும்பு"
"இயல்வது கரவேல்"

என்னும் அமுதவாக்கியங்களையும் அவற்றின் கருத்தையும் பள்ளியிற்கற்கும் இளஞ்சிறார்களும் நன்கறிவார்கள். அன்றியும்,

"போம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்"
"பற்றித்தொடரு மிருவினைப் புண்ணியபாவமுமே"

என்னும் அருமைத் திருவாக்குகளின் வண்ணம் புண்ணியம் செய்தலே மனிதராய்ப்பிறந்தார் செய்யவேண்டிய முக்கிய கடமையாம். இனி, தானதருமஞ்செய்வதனாற் பெறப்படும் புண்ணியபலனைத்தான் எவ்வாறு அடைதல் கூடுமெனின், சர்வாண்ட பிண்ட சராசரங்களனைத்தையும் ஆக்கியருளிய முதல்வனாகிய பரமேச்சுவரன் சர்வாந்தரியாமியாகலான் ஒவ்வொருவர் செய்யும் புண்ணியங்களனைத்தையு மோர்ந்து அவைகட்கேற்றவாறு பிரதிபலனாக மறுமைக்கண் இன்பத்தை நுகர்விப்ப னென்க.* அன்றியும் அவர் கருணாமூர்த்தியும் ஆன்மகோடிகளுக்கு நன்மை செய்தலையே தமது முக்கிய கருமமாகக் கொண்டவருமாதலால் அவர் தாமருளிய வேதசிவாகமங்களிலே புண்ணியஞ் செய்தலே யாவர்க்கும் முக்கியகடமை யெனவும் அங்ஙனஞ் செய்யாதுவாளாவிருத்தல் பாவமெனவும் விதித்தருளினார். ஆதலால் புண்ணியஞ்செய்தலே மனிதராய்ப் பிறந்தார் செய்யவேண்டிய முக்கிய செயலென்பது பெறப்பட்டது. இனி தானதருமஞ் செய்வது முக்கியமான கடமையாயிருப்பினும் அதனைப் பின்னொருகால் செய்துகொள்ளலாமோ வெனின், அது கூடாது. ஏனெனில்,

"நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

என்னும் திருக்குறளின் வண்ணம் சரீரமானது நிலையுடைப் பொருளன்றாகலின் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்னும் பழமொழிப்படி இச்சரீரமுள்ளபோதே தானதருமஞ்செய்ய முயற்சிக்கவேண்டும். ஆனது பற்றியே, "அன்றறிவாமென்னாதறஞ்செய்க" என ஆன்றோர் கூறியருளியதுமாமென்க. அன்றியும்,

"பொன்னுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்மு
னுன்னக் கனிந்தறஞ் செய்துய்கவே"

என்னும் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கின் வண்ணம் இச்சரீரமுள்ள பொழுதே தானதருமங்களைச் செய்து அதனால் எய்தற் பாலதான நித்தியமாகிய புண்ணியப் பேற்றைப்பெற்று உய்திகூட முயலுவதே உத்தமமாம். சுபம்.

பொ. மு. முத்தையபிள்ளை.

அன்னதானம்.

பிரபுக்களே! சாக்ஷாத் ஜெகதீசனதனுக்கிரகத்தால், நம்மவர்களிற் பெரும்பான்மையோர், தக்க ஸ்திதியுடையவர்களாயிருக்கின்றார்கள். இவர்களிலநேகர் சரியான தர்மஞ் செய்யாதிருப்பதைப் பார்க்க மனம் வருந்துகிறது. தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார்,

"சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு"

என்றார். அதாவது, மோக்ஷத்தையுஞ் செல்வத்தையுந் தருவது, அறமென்னும், மேன்மையான பதவியை யடைதற்கு, தர்மத்தைவிட வேறுமார்க்கம் கிடையாதென்னவும் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்? ஆகையால் பெறுதற்கரிய மானிடப்பிறவியைப் பெற்ற ஒவ்வொருவரும், தம்மாலியன்ற தர்மம் செய்யவேண்டுவது மிகவும் அவசியம். தர்மம் செய்வோர் நற்சிந்தை, இன்சொல் இவைகளோடு செய்யவேண்டும். அன்றியும், பொறாமை, கோபம், ஆசை, கடுஞ்சொல் இந்நான்கினையும் அகற்றல் வேண்டும்.

அன்னதானமே, அதாவது, ஏழைகட்கு அன்னமிட்டுப் பசியாற்றுந் தர்மமே, எல்லாவிதத் தர்மங்களினும் முதன்மையானது. கல்வி கற்பிப்பதற்குச் சம்பளம் புஸ்தகம் முதலியவற்றிற்குப் பொருளுதவிபுரியுந் தர்மத்தை, அன்னதானத்திற் கிரண்டாவதாகச் சொல்லலாம். ஆனால், கல்வி கற்பதற்கு வேண்டுஞ் சம்பளம், புஸ்தகம் கொடுத்து உதவி புரிவதோடு அன்னமும் அளித்தால், அதைவிடச் சிலாகிக்கத்தக்கது பிறிதொன்றுமில்லை. இவ்வாறு சத்திரங்களைக்கட்டுவித்து, அன்னதானம் நடத்துவோர் பெரும்பாலும் பிராமணர்களுக்கு மட்டும் அன்னமிடுகிறார்கள். ஏழை ஜனங்கள் எச்சாதியிலுமிருக்க, அவர்கட்கு அன்னமிடாமல் பிராமணர்கட்குமட்டும் அன்னமிடுவதென்ன முறையோ! பூர்வகாலத்தில், பிராமணர்கள் மிகவும் ஏழைகளாய், வேதமோதுதல் முதலிய தொழில்களைக் கைக்கொண்டிருந்தார்கள். அதுபற்றிப் பிராமணர்களுக்கு மாத்திரம் சத்திரத்தில் சாப்பாடென் றேற்படுத்தப்பட்டது. தற்காலமோ அப்படியன்று, சத்திரங்கட்குச்செல்லும் பிராமணர்களிற்பெரும்பான்மையோர் பணக்காரராயும், பிராமணஜாதியார்கட் கவசியந்தெரிய வேண்டும் முறைகள்கூடத் தெரியாதவர்களாயும், சோம்பேறிகளாயு மிருக்கிறார்கள். மேலும் தற்காலத்திய சத்திரத்தலைவர்கள் தம்மிஷ்டர்களாகிய ஜனங்களுக்குத்தான் விசேஷமாய் அன்னமிடுகின்றார்கள். வாயுள்ளோர்க்கே தற்காலம் பிழைப்பு. மிகவும் ஏழைகளாயும் மிகவும் நல்லொழுக்கமுள்ளவர்களாயுமிருப்பினும், முகஸ்துதி செய்யும் வாய்ச்சாதுரியமில்லாவிடின், சத்திரத்திற் சாப்பாடு கிடைப்பதரிதாயிருக்கின்றது.

எந்த ஜாதியாராயினுஞ் சரியே, ஏழையென்று தெரிந்தமாத்திரத்தில் அன்னமிடுவதே நம்மவர் கடமை. "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்ற நம்முதாய்ப் பிராட்டியாரின் வாக்கியத்தைக் கடைப்பிடித்து, ஏழைகளுக்கு எச்சாதியாராயிருந்தாலும் அன்னமிடுவதோடு, அவ்வேழைகளின் சந்ததியாருக்கு உண்டிமுதவி, இம்மைக்கும் மறுமைக்கும் சாதனமாகும் புண்ணியத்தைத் தேட முயல்வோமாக.

O. P. உமையொருபாகன்.

சைவசித்தாந்தம்.

*பதிபசுபாசத்தொகை

(155-ம் பக்கத் தொடர்ச்சி)

நூல்

முதலாவது பதியியல்.

"பல்லுயிர்க்கு மேக மமலன் சிவன்பதியப்
பல்லுயிரு மீசன் பதி.

இது பரமனது குணங்களுள், அவன் தன்வயத்தனாயிருத்தலை யுணர்த்துகின்றது.

(பதவுரை) ஏகன் = ஒப்புயர்வற்ற ஒருவனாம், அமலன் = அநாதியே மலமுத்தனாயுள்ளோன், சிவன் = சிவபெருமான், பல்லுயிர்க்கும் = எண்ணிறந்த ஆன்மாக்களுக்கும், பதி = தலைவனாம், அப்பல்லுயிரும் = அவ்வெண்ணிறந்த ஆன்மாக்களும், ஈசன் = இறைவனுக்கு, பதி = தங்குமிடமாம். (எ-று)

சிவபெருமான் ஒப்பாரு மிக்காருமின்றித் தன்னேர் தனியனாய் இருத்தல்பற்றி "ஏகன்" என்றும்; ஆன்மாக்களைப்போல மலபெத்தனின்றி மலமுத்தனாயிருத்தலால் "அமலன்" என்றும் கூறப்பட்டது.

ஈண்டு பல்லுயிரென்றது விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூன்று வகை உயிர்த்தொகைகளை எனக. அவைகள் எங்ஙனமிரும் பதியாவ தெங்ஙனம்? எனின் இறைவன் சர்வவியாபியாயிருத்தலால், ஆத்துமாக்களின் உள்ளும் புறம்புந்தங்கி நிற்பானாதலால், அவன் இயக்கி அறிவிக்கவழி யொழுகுவது ஆன்மசுதந்திரம் யாதும் பற்றி உயிர்களின் மேன்மாத்திரம் ஏற்றிக்கூறினர்.

மலமுத்தன் = இயற்கையிலேயே மலசம்பந்த மில்லாதவன்; மலபெத்தன் = மலத்தோடு பந்திக்கப்பட்டவன்; விஞ்ஞானகலர் = ஆணவம் மாத்திர முடையார், பிரளயாகலர் = ஆணவம், கன்மம், மாயையென்னும் மும்மலமுடையவர், ஈசன் = எப்பொருட்கு மிறைவன்.

விஞ்ஞான நிலையாகிய விசிட்டமான ஞானமுறைமையாய்ச் சிவதவம் பெற்று சர்வசங்கார காலத்தில் மந்திரதேகத்தைவிட்டுச் சிவத்துடன் இரண்டறக்கூடுதலால் விஞ்ஞான கலரென அழைக்கப்பெறுவர். பிரளயமாகிய சர்வ சங்காரகாலத்தில் புரியட்டக தேகத்தைவிட்டுச் சிவாநுபூதியடைபவர்கள் பிரளயாகலர். சகலர் = கலாசகிதர். ஸ்தூலதேக முடையவர். இவர்கள் இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதமுற்று குருவினால் மோட்ச முறுவர்.

"உடலொலியின் மூல வொலியுறைதல் போலக்
கடவுளுயிர் தோறு முறுமகாண்"

இது அவன் எங்கும் வியாபகனாயிருத்தலை யுணர்த்துகின்றது.

(ப-ரை) மூலவொலி = அகரவொலிவடிவெழுத்து, உடலொலியின் = மெய்யொலிவடிவெழுத்தில், உறைதல்போல் = தங்கி நிற்குந்தன்மை போல, கடவுள் = இறைவனும், உயிர்தோறும் = ஆத்துமாக்கள் தோறும், உறும = பொருந்தி நிலைபெறுவன். (எ-று)

---

* உரையாசிரியர் S. பால்வண்ண முதலியார்.

எவ்வெழுத்தும் உச்சரிக்கப்படுங்கால், அகர வொலியே முதற்கண்ணின்றதுவ் வெழுத்துக்களை இயக்கி ஒலிப்பிக்குந் தன்மை பற்றி "மூலவொலி" என்று கூறினர்.

மெய்யொலிகள் உயிர்த் துணையாய்ப் பிறக்குமேயன்றித் தாமே தனித்துப்பிறக்கும் வன்மையுடையனவன்று ஆதலால் "உடலொலி" என்றார்.

ஒற்றொலியைக் கண்ணொளிக்கும், உயிரொலியைக் கதிரவன் ஒளிக்கும் சமப்படுத்திக் கூறுவர்.

எழுத்துகள் தோறும் அகரஞ் சென்றிருத்தல் போல் ஆன்மாக்கள் தோறுஞ் சிவன் வியாபித்திருப்பன். அகரமின்றி எழுத்துகள் இயங்காத் தன்மைபோல், இறைவிளையின்றி ஆன்மாக்களும் இயங்கா. அகரம் எழுத்துக்களுக்கெல்லா முதலாயினாற் போல் இறைவனு ம் ஆன்மாக்களுக்கெல்லா முதல்வனுமவன். அகரந்தனித்தும், மெய்யோடுகூடியும் இயங்குதல் போல், இறைவன் ஆத்துமாக்களுக்குடனாயும் வேறாயும் நிற்பன். மற்றவை ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இஃது ஒருபுடையுவமை. காண் = அசை. உறும் = படர்க்கை ஒருமைவினை முற்று.

"ஆதாரம் வேர்மரத்துக் கீச னனைத்துயிர்க்கு
மாதாரம் வேர்க்குமர மன்று"

இது இறைவனது சருவ காரணத்துவம் உணர்த்துகின்றது.

(ப-ரை) மரத்திற்கு ஆதாரம்வேர் — மரத்தை நிலை நிறுத்தி வளர்ப்பதற்குக் காரணமாயிருப்பதுவேராம், ஈசன் அனைத்துயிர்க்கும் ஆதாரம் = (அதுபோல) சகல புவனங்களிலும் விளைக்கீடாய்த் தோன்றிச் சஞ்சரிக்கும் ஆத்மாக்களுக்கெல்லாம் பரமசிவமே ஓர்களை கண்ணுவன், வேர்க்கு (ஆதாரம்) மரமன்று — வேரை நிலைநிறுத்தி அதனை ஜீவிக்கச் செய்தற்குக் காரணம் அவ்வேரையே ஆதாரமாகக் கொண்ட மரமன்று; (அதுபோல பஞ்சகிருத்தியங்களையும் சங்கற்ப மாத்திரத்தாற் செய்யும் பரமனுக்குப் பிறந்திறந்து உழன்று திரியும் ஆத்துமாக்கள் ஆதாரமாகாவாம்) (இது சொல்லெச்சம்)

அநாதி கேவலத்தில் ஆணவமலத்தோடுகூடி அறிவு, இச்சை, செயலற்றுக்கிடந்த ஆன்மாக்களைக் கருணைமேலீட்டினால் எடுத்துக் கன்மத்திற் கேற்ப தநு, கரண, புவன, போகங்களை அளித்து, பாசம் வருவித்தற் பொருட்டுச் சகலாவஸ்தையில் பலதரம்விட்டு, இருவினை யொப்புவந்தவாறே ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளி, தீட்சையால் சஞ்சிதத்தை யொழித்து, ஆகாமியம் வருதபடியுங்காட்டி, ஆன்மாவினுடன் அபேதமாய் நின்று தேகத்தோடு பிராரத்துவத்தையும் போக்கி, அழியாப்பேருகிய முத்தி வீட்டின்கண் இருத்தி வாழ்விக்கும் முழுமுதல் அவனே யாதலால், அவனை அனைத்துயிர்க்கும் ஆதாரமானுன் என்று கூறப்பட்டது.

பிந்திய ஆதாரத்தை நமதிலத் தீபமாக்கி ஈரிடத்தும் கூட்டுக.

"ஆகுஞ் சடங்கா னணுவறியா திவ்விரண்டின்
யோகஞ் சிவனெலன் றோர்"

இது இறைவன் இயற்கையுணர்வினனுதலை யுணர்த்துகின்றது.

(ப-ரை) ஆகுஞ்சடம் = ஆன்மாக்கள் பொருந்துவதற்கான பல்வகைப்பட்ட உடல்களும் அசித்துப்பொருள்களேயாம், அணு அறியாதுணைமலத்தால் மறைப்புண்ட அற்ப அறிவினனுகிய அவ்வான்மாவும் தானே யாதாமோர் உடலினுட்பொருந்துதற்கு

அறியமாட்டாது, இவ்விரண்டின் யோகம்=மாயாகாரியமாகிய உடலையும் சிற்றறிவினனாகிய ஆன்மாவையும் ஒன்றுபடுத்தலாகிய செயல், சிவனுடையவென்று ஓர்=இயற்கை உணர்வினனாகிய இறைவனால் என்று அறிவாயாக. (எ-று)

மாயைசடமாதலால் அதன் காரியமாகிய உடலும் சடமேயாம். ஆன்மா சித்தாந்தன்மையில் கடவுளோடு ஒத்த ஜாதியாயிருப்பினும் இறைவனது பேரறிவையும் இவனது சிற்றறிவையும் உற்றுநோக்குங்கால் அவனுக்கு இவன் அசித்தாம். கேவலாவஸ்தையிற்கிடக்கும் ஆன்மாக்கள் கருவி கரணாதிகளோடு கூட்டப்பட்டாலன்றி, அவைகள் மலநீங்கித் தம் நிலைமையையும் தலைவனது நிலைமையையும் அறிந்து உய்யமாட்டாவாதலால், கருணைவள்ளலாகிய கடவுளும் ஆன்மாக்களைத் தேகங்களோடு சம்மந்தப்படுத்துவானாயினான். இவ்வாறு சம்மந்தப்படுத்துவது, புடவையின் அழுக்கை உவர்சாணி முதலியன கொண்டு சுத்தப்படுத்துதல் போலென்க.

ஆணவமலத்தால், ஆன்மா தனது வியாபக அறிவிற் சுருங்கி அணுத்தன்மை எய்தியதால் ஆன்மாவை ஈண்டு அணுவென்று கூறப்பட்டது. ஆகம்=தேகம் போகம்=சேர்க்கை.

இக்குறள் தேகத்துக்கு அந்நியமான ஆன்மாவினது உண்மையையும், அவ்வான்மாவைப் பிரேரித்தற்குரிய ஓர் கடவுளது உண்மையையும், அறிவுறுத்துகின்றது. காண்=அசை.

"கருமஞ் சடம்பலத்தைக் காட்டாது காட்டு
நிருமலனென் றேநீ நினை"

இது இறைவன் பாசங்களினின்று நீங்கியிருத்தலை புணர்த்துகின்றது.

(ப-ரை) கருமம்=கன்மமலமும், சடம்=அசித்தேயாம், பலத்தை=அதனால் ஆன்மாக்கள் அடையவேண்டிய இன்பதுன்பங்களை, காட்டாது=அக்கன்மம் தானே இயைந்து அநுபவிக்குமாறு செய்யாது, நின்மலன்=மலரகிதனாகிய பரமனும், காட்டுமென்றே நீ நினை=ஆன்மாக்களுடன் பொருத்துவிப்பானென்று நீ நினைப்பாயாக. (எ-று)

ஆன்மாக்களாற் செய்யப்படும் நல்வினை, தீவினைகளை ஸ்தூலகன்மமென்றும், இவ்விருவினைகளுக்கும் பலனாய் வரும் புண்ணியபாவங்களைச் சூக்கும கன்மமென்றும், இப்புண்ணிய பாவங்களுக்குப் பலனாய் வரும் இன்பதுன்பங்களை அதிசூக்கும கன்மமென்றும் உண்மைநூல்கள் கூறுகின்றன.

இவைகள் முறையே ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவமென்று அழைக்கப்படுவனவாம். இவைகள் நெல்விளைவித்துக் களஞ்சியத்திற் சேர்த்து, பின் கொஞ்சம், கொஞ்சம் எடுத்துப் புசித்தற்கு ஒப்பன. இவைகள் வன்மை, மென்மை என இருதிறப்பட்டிருப்பனவாம். இவைகள் முன்பு ஆர்ச்சித்த ஒழுங்கிலேயாயினும், முறைமாறியேயாயினும் ஆன்மாக்களைவந்து பொருந்துவனவாம். ஜாதி, ஆயுள், போகம், ஜனனமரணமுதலிய வைகளுக்குக் காரணமும் இவைகளே. நல்வினை தீவினைகளுள் ஒன்றற்கொன்று ஈடாகமாட்டாது. யாவும் அநுபவித்தே தீரவேண்டும். முன்னர்க்கூறிய பிராரத்துவ கன்மம், தெய்வத்தால் வரும் ஆதிதெய்வீகம், பஞ்சபூதங்களினால் வரும் ஆதிபௌதிகம், பிறவுயிர்களால் வரும் ஆதிஆன்மீகம் என முத்திறப்பட்டு நிற்கும்.

மலபெத்தர்களாகிய ஆன்மாக்களைப் பக்குவமடைவித்தற்கு மலமுத்தனாகிய ஒருவனாற் கூடுமாதலால் ஈண்டு இறைவனை நிர்மலனென்று கூறினர்.

இச்செய்யுளினால் கன்மவாதியை மறுத்தவாறாயிற்று. ஆகப்பாயிரமுள்படச் செய்யுள் (10)

(இன்னும்வரும்)

S. பால்வண்ணமுதலியார்.

—:0:—

அறிவு விளக்கம்.

(121-ம் பக்கத் தொடர்ச்சி)

பழமைக்கிரகஸி.—சிலர் முன் சொன்ன இல்லற தர்மத்தை அனுஷ்டித்தும், பூர்வாசாரங்களை இஷ்டமில்லாது விடுகின்றனர். வானப்பிரஸ்தாசிரமமாவது:—

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை'

என்பதற்கிணங்கிய மனைவியும் புருஷனும் திரிகரணமொத்து, வனத்திற்போய்க் கடவுளை நோக்கி, பஞ்சபட்சையோடாகிலும் அப்பட்சையின்றியாகிலும் தவம் செய்தலாம். சந்நியாச ஆசிரமமாவது: மண், பெண், பொன் ஆகிய மூவாசைகளையும் ஒழித்து நீங்கி, சகல சங்கப்பரித்தியாகஞ் செய்து, வாக்கு, காயத்தைத் தண்டித்தற்கடையாளமாகத் திரிதண்டம், அதாவது, மூன்று மூங்கிற்றடி கையிலேந்தித் திரிதலாம். இச் சந்நியாச ஆசிரமம் பெற்றவரில் சிலர் ஓரிடத்தில் நிலைபெயராமல் ஒருக்கு ஒரு சால பீடம் தங்கி, பாமரர்களுக்கு ஞானோபதேசம் செய்து, நல்வழியில் திருப்புவார், வேறு சிலர் புராண சாஸ்திரங்களை வாசித்து மடாதிபதிகளாகி அவைகளின் அர்த்தங்களையும் தத்துவங்களையும் விளக்கி ஜனங்களைத் தெளிவடையச் செய்வார்கள். இவ்வாசிரமங்களைத் திரிகரணமொத்து அனுஷ்டித்தால் பலன் உண்டேயல்லது வெளியில் வேடந்தரித்தலால் யாதொரு பயனுமில்லை.

உண்மை விரும்பி.—அன்பரே! பழமைக்கிரகியரே! இதுவரையில் தாமிருவரும் வாதித்து முடிவுசெய்ததைச் செவியுற்று ஆனந்தித்தனன். ஆனால் பக்திகாண்ட முடிவென்று தெரிவித்த பெரியோர் மறந்து தெரிவித்தனரோ? ஆச்சரியம்! ஆச்சரியம்! தாங்களிருவரும் முடிவு செய்து கொண்டது போல், தத்தேசத்திலும், எம்மதத்திலுமுள்ள யாவரும் கர்ம காண்டவிதிப்படி ஒழுகின், இரண்டாவதான பக்தி காண்டத்தை அனுஷ்டிக்க, பகுத்தறியும் அறிவு, பஞ்சேந்திரிய அறிவுமுடைய மனிதராகிய நாம் உரியரல்லவோ வேறியாவர்? பரிசவறி வொன்றுடையதாவராதிகளோ? அல்லது மற்ற இரண்டு மூன்று-நான்கு-ஐந்து அறிவுடைய ஜீவர்களோ? தயைசெய்து கூறுமின்.

பழமைக்கிரகஸி.—தம்பி! எனதாசிரியர் கர்மகாண்டத்தை ஜன்மம் எடுக்கும்போதெல்லாம் அனுஷ்டிக்க வேண்டியதென்றும், வேறொன்றையும் அனுஷ்டிக்கக் கூடாதென்றும், அப்படி யனுஷ்டித்தாலும் அல்லது தன்னை யெதிர்த்துக் கேட்டு, சாஸ்திரம் ஆராய்ந்தாலும், மகாதோஷமென்றும் பயமூட்டி, உடலோம்பிக் கொடுமைசெய்து மனதிற் கவலையூட்டினாரன்றிச் சந்தோஷத்தைப் புகட்டினாரில்லை. அவர்கள்,

"வினைவினைமுதலைக் காப்பவையென்னும் விவேகத்தோர்
வினையினைக்காப்பவை யுடலலவென்ன விளம்பிடவோ
நினைபவவேறு மஞ்ஞலருலகே திறமென்றுந்
தனையறிபொருளெனு மறையெனவோதச் சலியாரே"

என்ற மேலோர் வாக்கியத்திற் கிணங்கின ஆசிரியர்போல் தோன்றுகிறது. நீகேட்ட பக்தி விஷயம் யாதொன்றுமறியேன். நீயே வெளியிடல் வேண்டும்.

உண்மை விரும்பி:—பழமைக்கிரகியரே! பக்தியால் சாரூபபதவி யடைந்தவர்கள் யாரெனில், வைகுண்டத்தில் சாயுச்சிய பதவியடைந்த சடகோபாழ்வார் தவிர

மற்றப்படி ஆழ்வார்களும், சைவத்தில் பிரமன் இராவணன் முதலிய பக்தர்களுமாம். இவ்வாறே மற்ற மதங்களிலும் உளர். பக்தியில் மூன்று விதப் பக்தியுண்டு. 1. பகிரங்க பக்தி அதாவது, வெளியிலுள்ள எப்பொருளிலேனும் ஈசுவரபாவனையால் பக்தி செய்தல்; 2. அந்தரங்கபக்தி அதாவது ஆன்மாவைத் திரிகரண சுத்தமாய் சர்வவியாபகராயிருக்கும் பகவானைத்தியானித்தல், 3. அனன்னியபக்தி அதாவது சகலமுமே தானாகத் தியானித்தல். இவ்விதமாய்ப் பக்திசெய்வதற்கு அட்டாங்கயோகம் லயயோகம் மந்திரயோகம் முதலிய யோகங்களும் ஏற்படுத்தியிருக்கின்றனர். ஐயறிவோடு பகுத்தறிவையுமுடைய மனிதனன்றி இதனை அநுசரிக்கும் வலியுடைய ஜீவராசியுமுளவோ?

பழமைக்கிரங்கி:—தம்பி! "புத்திமான் பலவான்" ஆகையால் உன் புத்திநுட்பத்திற்கு யான் சந்தோஷிக்கிறேன்.

"ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம்பிளக்க வேர்வீழ்க்கு மே"

என்பதை நோக்க உன்னுடன் பழக விரும்புகிறேன். மேற்கூறிய மூவிதப்பக்திகளில் பகிரங்க பக்தியை அனுஷ்டிப்பதைப் பற்றியும், அதனால் மனம் உறுதியடையுமோ என்பதைப் பற்றியும், ஏதாவது பெரியோரால் கேட்ட சரித்திரமுளதாயின் வெளியிட வேண்டுகிறேன்.

உண்மை விரும்பி.—அன்பரே! பழமைக்கிரங்கியே!

"யதார்த்தவாதி வெகுஜன விரோதி"
"உள்ளது உரைக்கின் கள்ளர் வருந்துவர்"

ஆகையாலுரைக்க அஞ்சுகிறேன். ஆயினும், உன் பொருட்டு உரைக்கிறேன். பலர் உண்மையில் பழகுவது கஷ்டம். உண்மையாளர் யாராவது, நீ நடப்பது தப்பான வழி, "நன்மை கடைப்பிடி" என்றால், மூடர் அவ்வுண்மையாளர் வாக்கை தேவவாக்காய் உணராமல், ஒவ்வொரு விஷயத்திலும் குருட்டு நம்பிக்கையுடையவர்களாய் ஒருவர் பின் ஒருவர் ஆடுகள் மாதிரி தொடர்ந்து கும்புசேர்ந்து பக்தனைப்போல் வெளிவேடம் காட்டி ஜனங்களை மயக்கி வயிறு வளர்க்கின்றனர். இவ்வித மூடர்களிடம் சேராமல் விலகி நல்வழியில் நடப்பதற்கு "ஞானமருந்தோ? ஜாத்திரை மருந்தோ?" என்னும் கேள்வியுடைய ஒரு கதை ஒரு பெரியவர் எனக்குத் தெரிவித்திருக்கிறார். அஃதென் ஞாபகத்திற் படிந்திருக்கிறது. அதைச்சொல்லுகிறேன். கதைவருமாறு:— நிடததேயத்தின் கலைக்கோது நகரத்திற் பட்டம் பெற்றிருந்த காமகோடி எனும் அரசனொருவனிருந்தான். அவனுக்குச் சுகுணன், துர்மதி, விகடகவி, நிபுணன் எனும் நாலு மந்திரிகளிருந்தார்கள். முதல் மந்திரியானவர் காமகோடியின் பிதாவுக்குக் காலமுதல் மந்திரியாயிருந்தார். ஆகையால் காமகோடி அரசன் ஒரு நாள் மேல்மாளிகையில் வரவழைத்து, தான் ஒரு பெரியவரால் கேள்வியுற்ற "ஞானமருந்தோ? ஜாத்திரைமருந்தோ?" என்பதின் விபரமெவ்வனமென்று கேட்டார். அம் முதல்மந்திரி ஒருவாரம் கெடுவுபெற்று வீடுசேர்ந்து, அநேகபண்டிதர்களுடன் ஆலோசித்தார். அப்பண்டிதர்கள் சாஸ்திரங்களில் தேடிப்பார்த்தும் ஒன்றும் விளங்காததினால் அவ்விஷயத்தை மந்திரிக்கு அறிவிக்க, மந்திரி யாதும்தோன்றாமல் துக்கங்கொண்டவராய் ராஜசமூகம் சென்று, "ஐயனே! எனக்குச் சம்பளத்துடன் ஆறுமாத விடுமுறைகொடுத்தால் நான் தேசசஞ்சாரம் செய்து, அவ்வாக்கியங்களுக்குப் பொருள் அறிந்துவருவேன்" என்றனர்.

அங்ஙனமே ராஜன் அநுமதிக்க, முதல் மந்திரியும் தேசஞ்சுற்றிவரப் பிரயாணப்படும்போது வீட்டில் வேண்டிய செலவுக்குக்கொடுத்துவிட்டு, நான்கு சேவகருடன் புறப்பட்டுப்போனார். அவ்வாறு செல்லும்போது நடுக்காட்டில் ஒரு சந்நியாசியைச் சந்தித்து "ஞானமருந்தோ, ஞாத்திரைமருந்தோ" என்பதின்பயனென்னவென்றுவினவிப் பதிலறிந்து அப்புறஞ்சென்றார். வழியில் சீற்றஞ்சேரி எனும் ஒரு கிராமத்தைக் கண்ணுற்றார், அன்று அக்கிராமத்திற்றங்கி, கடோத்கஜன் என்பவனுடைய வீட்டிலிறங்கிப் போஜனஞ்செய்தார். பின்பு சிவந்தமேனியுந் நெடகாத்திர சரீரமுமுடைய அவன் பிள்ளையாகிய குண்டோதரனைப்பார்த்து, தான் எண்ணிவந்ததற்குச் சரியான ஆள் இவன்தான்; "கும்பிடப்போன தெய்வம் குறுக்கேவந்தது" போலும் "தேடப்போன தனம் காலில்பட்டது" போலும், அகப்பட்டானே யென்று சந்தோஷித்தார்.

(இன்னும் வரும்.)

பு. ஜயராமபிள்ளை.

"பாவம், மூப்பு, மரணம் துக்கம், பசி தாகம், இவற்றினின்று விடுபட்டதாயும் இச்சிக்கவேண்டிய தல்லாததை யிச்சிக்காததாயும், நினைக்கவேண்டிய தல்லாததை நினைக்காததாயுமிருக்கின்ற உண்மைப்பொருள் எதோ அதையே நாமெல்லோரும் தேடவும் அறியவு முயற்சிக்கவேண்டியவரா யிருக்கின்றோம்"

*
**

"வெளித்தோற்றத்தையோ, நிலைமையையோ வைத்து ஒருவனை நிதானிக்கும் மனிதனைப்போல மூடன் எவனுமிலன்; புறத்தோற்றம் எவ்விதமிருப்பினும் ஒருவனுடைய மனம் சுவாதந்திரியமாயிருத்தல் கூடாதென்பதில்லை; யாவனொருவன் ஹிம்சை பொறாமை, பேராசை, விஷயசுகம் இவைகளுக் காட்பட்டிருக்கின்றானோ அவனே சுவாதந்திரிய மில்லாதவன்"

*
**

"தெய்வத்தன்மை பொருந்திய எண்ணங்களையுடையவராய் நீங்கள் கடவுளை வணங்கக்கடவீர்கள், ஆனால் எவனொருவன் கடவுளானவர் வணக்கத்தை விரும்புகிறாரென்றெண்ணி அவரை வணங்குகிறானோ அவன் கடவுளினு மேலானவனாகத் தன்னை மதியீனமாய் நினைத்துக்கொண்டவனாகிறான்"

*
**

"மனிதருடைய துக்கமெல்லாம் அவர்களுடைய சொந்தக் கையினாலேயே செய்யப்பட்டன வென்றறிவீர்களாக. அத்தியந்தம் சமீபத்திலிருக்கும் நன்மையைப் பார்க்கவும், கேட்கவும் செய்யாததினால் அவர் துக்கத்தை யநுபவிக்கின்றனர். தீமையினின்று தப்பும்வழியை யறிந்தவர் மிகவும் சிலரேயாம்"

*
**

"யாதாமொரு செய்கையைச் செய்வதற்கு வேண்டியதைப்பார்க்கிலும் யாதொருசெய்கையுமன்றிச் சும்மாவிருப்பதற்கு வேண்டியசக்தி அளவிறந்தாயிருக்கின்றது அபரிமிதமான சக்தி யிருப்பதற்கோர் அறிகுறி சாந்தம்"

*
**

ஸ்ரீ பரம ஹம்ஸ சிவநாராயண சுவாமிகள்

(111-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஜாதிபேதநீக்கம்.

இவ்வாறாகத் தந்தையின் ஆச்சிரமத்தினின்றும் புறப்பட்ட இப்பாலர் "இனி, நான் முதலில் எங்கே செல்வது? பலவிடங்களிலும் உயர்ந்தோர் தாழ்ந்தோர்களென்கி இருதிறத்தோர்களுக்கும் நேரிட்டிருக்கும் பெருங்குறைகள் யாவை? அக்குறைகள் எவ்வுபாயங்களால் நிவிர்த்திக்கப்படும்? உலகத்தோர்கள் ஒருவரையொருவர் உள்அன்புடன் சமமாக நேசிக்கும்படிக்கும் அவர்களில் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் வியாபகராயிருக்கும் கருணைக்கடவுளைக் கண்டறியும் படிக்கும் செய்விக்கும் உபாயங்கள் எவை? வித்வான்கள், மூடர்கள், சந்நியாசிகள், கிரஹஸ்தர்களாகிய யாவரும் சத்தியம், கபடமின்மை, இகபரசுக முதலியவற்றை யடையச் செய்வதற்குரிய உபாயங்களைச் செய்வதன்றோ நமது கடமை?" என்று அடிக்கடி சிந்தித்துக்கொண்டு, பலவிடங்களிலும் சஞ்சரிப்பாராயினர். பல சமயங்களில் ஈசனை நினைந்து "ஐயனே! விரோதம், வீண்தர்க்கம், கலகம் ஆகிய இவைகள் மானிடர்களுக்குள் தலையெடுக்கவொட்டாமற்செய்து என்றைக்கும் அவர்களைச் சந்தோஷிகளாக வாழும்படி அனுக்கிரகிக்கவேண்டும்" என்று தியானம் செய்வார். இவ்வண்ணம் சித்தப்பிரமை கொண்டவனைப்போல் திரிந்து கொண்டிருக்கும் சிவ நாராயணரைப்பார்த்த ஜனங்கள் "ஐயா! நீர் யார்? சாதுவா அல்லது கிரஹஸ்தரா? உம்முடைய குலமென்ன? ஜாதியென்ன? உமக்கு வேதங்களிற் பயிற்சியுண்டோ? அல்லது நீர் யாதொன்றும் கற்றிலரோ?" என்று பலவிதமாய் வினவுவர். இவர் "ஐயா! நான் யாதொன்றும் கற்றிலேன்; வேதங்களையும் அறியேன். பின்னும் தாங்கள் சொல்லுகிறபடி சாது இன்னவரென்றும் கிரஹஸ்தர் இன்னாரென்றுங்கூட அறிய இயலாதவனா யிருக்கிறேன். ஆனால் எனக்குத் தெரிந்தது தாங்களெல்லோரையும் போலவே நானும் ஒருமனிதனென்பதே. நான் என்ன ஜாதியென்று சொல்வேன். தங்களைப்போலவே எனக்கும் உடலும் அவயவங்களு மிருக்கின்றன. இறைச்சி, எலும்பு முதலிய வைகளால் செய்யப்பட்டுள்ள இவ்வுடம்பினிடத்தே ஜாதி யென்னும் ஓர் பொருளையும் அதன் வேறுபாட்டையும் நான் கண்டறிவேனாயினன்றோ, எனது ஜாதியைப்பற்றித் தங்களுக்குத் தெரிவிக்கக் கூடும்?" என்பர். இவ்வாறு சொல்வதைக் கேட்ட ஒருவன் "ஐயா! பூணூலைப் போட்டுக்கொண்டிருந்தும் உமது ஜாதி இன்னதென்று சொல்லக் கூடவில்லையோ?" எனவே, இவரும் "ஐயா! அதனாலென்ன? நீர் அணிந்திருக்கும் வஸ்திரமும் இது போன்ற நூலாற் செய்யப்பட்டது தானே. ஆதலால் நூலைக்கொண்டு ஜாதியறிவது எங்ஙனம்? ஒருவேளை நூலைத்தானே ஜாதியென்று சொல்லுகிறீர்களோ அறியேன்" என்றனர்.

பின்னர் முப்புரிநூலின் தாத்பரியம் என்னவென்று தமக்குள்ளேயே ஆலோசித்துத் தெளிந்தார். அதாவது பஞ்ச பூதங்களாகின்ற ஐந்து முடிச்சுகளோடு விளங்குவனவும், மனிதரால் பிரமன், விஷ்ணு, சிவன் என்று அழைக்கப்படுவனவுமாகிய சாத்விகம், இராசதம், தாமதமென்று சொல்லப்படும் முக்குணங்களே உண்மையான முப்புரிநூல்; அதனைத்தரிப்பது ஆத்மா வாகுமென்பதே. இவ்விதமாக அறிவுதித்த பின்னர் அவர் தமது பூணூலைக் கழற்றிச் சமீபத்திலிருந்த ஓர் மரத்தின் கிளையில் தொங்கும்படி விட்டு அப்புறஞ்சென்றனர்.

பாபுஹரநாத சக்கிரவதி.

அப்பால் சிவநாராயண சுவாமிகள் அநேக நாடுநகரங்களெல்லாம் சுற்றி வங்காளத்துக்கு வந்துசேர்ந்தார். அங்கு ஒரு தெரு வழியாய்ச் செல்லும் பொழுது மேற்குறித்த பிரபுவைக்காண, அவரிடம் ஒருவேளை அன்னங்கேட்கவே அவர் "அடா! உன் சரீரம் நன்றாயிருக்கின்றதே. நீ வேலை செய்து பிழைக்கக் கூடாதா? இப்படிப் பிச்சையெடுத்து ஜீவனம் செய்வதில் உனக்கு யாதொரு வெட்கமும் தோன்றவில்லையா?" என்றனர். இது கேட்ட சுவாமிகள் "ஐயா! தாங்கள் சொல்வது முற்றிலும் எதார்த்தமே. உலகத்தில் புத்திமான் ஒவ்வொருவனும் தானே பிரயாசைப்பட்டு வேலை செய்து சம்பாதித்துக் காலக்ஷேபம் செய்யவேண்டுவது தான். ஆனால் நானோ இவ்வண்ட சராசரங்களையும் ஆளாநின்ற பகவானுக்கே உழைக்கின்றனன். உமக்கும் வேலைசெய்ய வேண்டுமாயிற்செய்கிறேன். அதிலும் ஆக்ஷேபணையில்லை" என்று சொல்ல, அப்பிரபு மறுத்தும் "அடா! நீ யாதுபிதற்றுகின்றனை? நீ பகவானுக்கு வேலைசெய்வது உண்மையாயின் அவர் உனக்கு அன்னமிட்டு உதவிசெய்யாரோ? உன்னை யிப்படித் தெருவும் திண்ணையுமாய் விட்டுவிடுவாரோ?" என்று பலவாறாகச் சொல்லியதை யெல்லாம் கேட்டுச் சிவநாராயணர் "ஐயா! பகவானிடத்தில் இடையறா அன்புபூண்டும், அப்பரம்பொருளே துணையென்றும் சதாபக்தியுடன் அவருடைய நியதியின்படி ஒழுகும் மாந்தர்கட்கு யாது குறையுளது" என்றனர். அது கேட்ட பிரபு "நல்லது, மற்றதெல்லாம் பேசவானேன். நீ நமக்கு வேலை செய்வதாகச் சம்மதித்தனையே. நாம் உனக்கு அன்னவஸ்திரம் போக மாதம் இரண்டு ரூபாய் சம்பளம் தருகின்றனம். நீ நம்முடைய வாசல் காப்போரி லொருவனாய் நின்று உன்னுடைய வேலைகளைச் சரிவரப்பார்த்துவா" என்றனர். அதற்கு சுவாமிகள் "ஐயா! நல்லது. தாங்கள் சொல்லிய வேலையைப் பார்த்து வருவதில் ஆக்ஷேபணையில்லை. ஆனால் எனக்குத் தாங்கள் அன்ன வஸ்திரம் கொடுப்பதே போதுமானது. யாதொரு சம்பளமும் வேண்டுவதில்லை" என்றனர். அதற்கு அவர் ஆச்சரியப்பட்டு "அப்பா உனக்குத் தாய் தந்தையர்கள் இருக்கின்றார்களா? நினக்குப் பொன்னாசை யில்லையோ?" என்று வினவ, சிவநாராயணரும் "ஐயனே! எனது சம்பள விஷயத்தைப்பற்றி நான் தங்களிடம் வேலைபார்த்து முடிந்து விலகுங்காலத்தில் பேசிக்கொள்ளலாம்" என்று சொல்லி, சம்பாஷணையைச் சுருக்கி விட்டனர்.

அது முதல் அப்பிரபுவினிடம் அவர் மிகவும் ஜாக்கிரதையுடன் வேலைபார்த்து வந்தார். தனது எஜமான் கட்டளையிடுந் தொழில் எவ்வளவு இழிவாயிருப்பினும் அவமானமென்பதைச் சிஞ்சித்தேனும் எண்ணாமல் அவருடைய குறிப்பறிந்து அவருக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் சரிவரச் செய்துவந்தார். எஜமானனும் இவருடைய வேலைத்திறமையைப் பற்றிச் சந்தோஷமும், மற்றைய வேலைக்காரர்களைப்போல் பணத்தில் ஆசையில்லாமலிருப்பதை நினைத்து ஆச்சரியமும் அடைந்தனர்.

இவ்வாறாக இப்பிரபுவிடம் இரண்டு அல்லது மூன்று மாதம் வரை வேலைபார்த்த பின், சுவாமிகளுக்கு அவ்வூரை விட்டு வேறு ஊர்களுக்குப் போக வேண்டுமென்று ஓரெண்ணம் தோன்றியதால் அதினின்றும் புறப்பட்டு,

ராம்பூர்போலியா

என்னு மிடத்துக்கு வந்து அங்குள்ள தேவிதாஸ் என்னும்வியாபாரியிடம்வேலை பார்க்கச் சம்மதித்தார். அவ்வியாபாரி தன் கணக்குகளை யெல்லாம் சரியாய்ப்பார்த்து

வரும்படி கட்டளையிட, இவரும் தம் வேலையை யாதொரு குற்றங் குறையன்றியிற் பார்த்து வந்ததோடு எஜமானனுக்கு இலாபங் கிடைக்கத் தக்க விதத்தில் மிகவும்செட்டாகவும் காரியங்களை நடத்தி வந்தார். எவ்வளவு வருத்தமான வேலையைக் கொடுத்தபோதிலும் கொஞ்சமாகிலும் பின்வாங்காது முன்னின்றே செய்து முடிப்பார். இதையெல்லாம் கவனித்த எஜமானன் "இவன் ஒரு முட்டாள் என்பதற்கு ஐயமில்லை; இவனுக்கு உலகமின்னதென்பது தெரியவில்லைப்போலும்" என்றெண்ணிச் சொன்னார். அவ்வியாபாரி தம்முடைய வேலைக்காரர்களை மிகவும் கேவலமான வார்த்தைகளால் திட்டுவதே வழக்கமாயிருந்தது. ஒருகால் அவர்தமது வேலையாட்களிலொருவன் செய்த அற்பக்குற்றத்திற்காக, அவனை மிகவும் அருவருப்பான வார்த்தைகளால் திட்டினார். இதைச் சிவநாராயணர் கவனித்துத் தம் எஜமான் முன்னிலையில் வந்து மிகவும்வணக்கத்துடன் கைகூப்பி நின்று "சுவாமி! தாங்கள் எனக்கு எஜமானுகையால் பிதா ஸ்தானத்திலிருக்கிறீர்கள். அடியேன் சொல்லும் வார்த்தைகளைப்பற்றிச் சந்தேகமும் கோபம் கொள்ளலாகாது. அடியேனுடைய துணிவுக்கு மன்னிக்கவேண்டும். தாங்கள் தயைசெய்து நான் சொல்வதையும் சிறிது கவனிக்கும்படி வேண்டுகிறேன். தாங்களோ எஜமான். (வேலைக்காரர்களைச் சுட்டிக்காட்டி) இவர்களோ தங்களுடைய வேலையாட்கள். தங்களுடைய தயவை எதிர்பார்த்து இவர்கள் காலக்ஷேபம் செய்பவர்கள். ஏழையாய்ப்போய்விட்டபோதிலும் அவர்கள் உயர் குடிப்பிறந்தோர்களே. அவர்கள் மீது அன்புபாராட்டி, இன்சொல்லியம்பி, வேலை வாங்க வேண்டுவதே தங்களுடைய கடமையாயிருக்க, அற்பகாரியங்களுக்கெல்லாம் அவர்களைத் தாங்கள் இவ்வண்ணம் ஏசுவது அவர்களுக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்குமன்றோ? தங்களிடத்தில் ஐசுவரியமிருக்கின்றதென்று நினைத்துத் தாங்கள் அவ்வண்ணம் ஏசுவது நியாயமாமா? சற்று ஆலோசியுங்கள். அவர்கள் ஐசுவரியவான்களாயிருந்து தாங்கள் அவர்களைப்போல் ஏழையாகவுமிருந்து, அவர்கள் தங்களை இவ்வண்ணம் திட்டினால் தாங்கள் என்னவிதமாயுணர்வீர்கள்? இது சம்பவிக்கக் கூடாத காரியமுமல்லவே. செல்வம் ஓரிடத்து நிலையுளதோ, அச்செல்வத்தை நாமிவ்வுலகத்திற்கு வரும்பொழுது கொண்டு வந்தோமா? அல்லது நாம்போகும்போது உடன் கொண்டு செல்கின்றோமா? ஒன்றுமில்லையே. அங்ஙனமிருக்க, இந்நிலையில்லாச் செல்வத்தைச் சதமெனநம்பி, இறுமாப்படைந்து, ஏழைகளைத் துன்புறுத்தலாமா? ஆஹா! தகாது! தகாது!" என்றனர். இதைக்கேட்ட வியாபாரி தீராக்கோபங்கொண்டு முன்னிலும் மிக அசங்கியமான சிலவார்த்தைகளுடன் சிவநாராயணரைத் திட்டி, தன்னெதிரே நிற்க வொட்டாமல் துரத்தவே, சிவநாராயணரும் தனக்குள்ளே "இவனைக் குற்றஞ்சொல்வதில் யாது பயன்? ஐசுவரியம், அதிகாரம் என்பவற்றின் வலிமைமேலிட்டால் இவருடைய மதியுங்கெட்டு, மனமும் கல்லாகி விட்டது. புத்திமான்களே இவற்றின் வசப்படாமல் தங்களுடைய மனதைச் சர்வவல்லபராகிய ஈசனுடைய பாதாரவிந்தங்களில் நிறுத்தி, தெளிந்த வுணர்வோடும், நிறைந்த திருப்தியோடும் எல்லாருடைய நன்மைக்காகவும் பாடுபடுவார்கள். இவரோ அங்ஙனம் காணப்படவில்லை, இனி இவரிடம் நமக்கென்ன காரியம்" என்றெண்ணிக்கொண்டு அவரை விட்டகன்றனர்.

(இன்னும்வரும்).

C. P, சுப்பையாபிள்ளை B. A.

சில பேர் பெற்ற நவீனச் சோநாட்டோர்

திருச்சாழல்.

1 பங்கமற நமக்கிவணே பலவளமும் நல்கிவரும்
மன்குலுக்கு நிகராக வழுத்தவிணே என்னேடீ
எங்குமற நீர்பரக்க விலங்குமன்னர் குலத்துதித்துத்
தங்குழல சநயமெனத் தான்பகர்வார் சாழலோ.

2 பல்லுயிரைத் தான்புரக்கும் பார்வேந்தர் தங்களுக்கு
நல்லமைச்சின் திறம்படைத்தோர் யாவரவர் நவிலேடீ
எல்லையிலாத் தொழில் [illegible] விலங்குமவ ரவர்மதியை
வெல்லுமதி சங்கரசுப் [illegible] சாழலோ.

3 பல்கலையுந் தத்துவமும் பரிவுடனே [illegible]
தொல்லுலகிற் புகழ்படைத்தோர் யாவரவர் சொல்லேடீ
கல்லெழுத்தைத் தன்னெழுத்தால் கற்றோர்க்க விக்கவந்த
சொல்லமையும் எம்-எ சுந்தரங்கான் சாழலோ.

4 நீதிதனில் மனுவைவென்று நிகரில்புகழ் படைத்தோரை
எதமில்சீர் குணமுடையோய் எனக்கறிய வியம்பேடீ
ஓதுகிறேன் குணமதிலும் ஒப்பறுதம் கல்வியிலும்
கோதகற்றி நிற்குமெங்கள் கோவிந்தன் சாழலோ.

5 துரைத்தனத்தைச் சார்ந்திலங்கித் துலங்குபல மாந்தர்களில்
வரையடங்காப் புகழடைந்தோர் மாதேயார் பகரேடீ
தரைமீதிற் புகழ்காட்டித் தண்ணளியெங் குங்காட்டிப்
பெருமைமிகப் பெறும்பிறவிப் பெருமாள்காண் சாழலோ.

6 பின்னுமிந்தச் சார்பினுக்கே பிறந்துரிமை பூண்டோரைக்
கன்னலன்ன மொழியுடையாய் கண்டெனக்குக் கழறேடீ
சொன்னபல நூல்களிலும் சொற்றவறு வாய்மையிலும்
தன்னிகரில் கேசவனைச் சாற்றுவர்காண் சாழலோ.

(இன்னும்வரும்)

கே, ஸி, குப்தா.

"ஒருவனுடைய இருதயத்தில் அன்பானது எப்பொழுது பிரவேசிக்கிறதோ அப்பொழுது ஈசுவரவிசுவாசமும் பலப்படுகின்றது; நல்லொழுக்கம் கடினமாயும் வெறுப்பாயும் இருக்கிறதில்லை".

*
**

மாணவர்பக்கம்.

திருவள்ளுவர் முதற்குறள்.

கிருஷ்ணனுக்கும் அர்ச்சுனனுக்கும் சம்பாஷணை.

(தொடர்ச்சி.)

கி. மெய்யெழுத்துகளும் அங்காப்புடனே யுச்சரிக்கப்படுதலின் அகரத்தின் தன்மையாகிய அங்காத்தல் அவற்றில் விளங்குகின்றமை காண்க.

அ. அவ்விதம் கூறுவது என்புத்திக்குச் சரியாகத் தோன்றவில்லை. மெய்கள் தாமேயியக்கும் தன்மையைப் பெறாதனவாதலின் உயிர்களாகிய துணைகொண்டு அங்காத் தலைப்பெற்று வரும். அப்படி வருவதால் அகரத்தின் தன்மை அவற்றில் காணப்படுகின்றதே தவிர, மெய்கள் தாமே ஒருக்காலும் அங்காக்குவரா. ஆகையால் மெய்யெழுத்துகள் அவற்றை இயக்குவிக்கும் உயிரின் பேதமே எனக்கூறல் தவறென நினைக்கிலேன்.

கி. அங்ஙனமாயின் இத்ததோஷம் இகரமுதலிய எழுத்துகட்கு முண்டு. அதாவது அவைகளும் அகரத்தின் தன்மையாகிய அங்காப்பின்றி உச்சரிக்கப்படுதலின் றென்பதே. ஆங்கிருக்கட்டும், மெய்யானது உயிரின் துணையைக்கொண்டு அங்காந்து வருவதாய்க் கூறினையே. அதனைப்பற்றி ஆலோசிப்பாம். கையானது உளியின் துணையைக்கொண்டு மரத்தைத் தறிக்கின்றது. கையிருக்கினும் இல்லாது போயினும் உளியிருத்தல்போல், உயிர் அதாவது அகரத்தின் அங்காப்பு இருக்கினும் இல்லாது போயினும் மெய்யெழுத்துகள் இருத்தல் வேண்டும். அங்ஙனம் அவைகள் வேறாகவேயிருந்தான், உயிர்த்துணையைப் பெற்று ஒலிக்கின்றன வென்பது நினது கருத்தோ?

அ. ஆம்; அதுவே யெனது கருத்து.

கி. அங்ஙனமாயின், அங்காப்பின்றி அதாவது வாயை மூடிக்கொண்டு மெய்யெழுத்துகள் உச்சரிக்கப்படல் வேண்டும். அவ்விதம் உச்சரிக்கப் படுகின்றனவா?

அ. வாயை மூடிக்கொண்டு உச்சரிப்ப தெப்படி? அது கூடாததான்.

கி. ஆகையால் மெய்யெழுத்துகள் வேறாகவிருக்கின்றன வென்பது பொருந்தாது. ஆனால் அவைகள் உயிரிலிருந்தே, அதாவது அகரத்தின் அங்காப்பிலிருந்தே உண்டாகி, அவ்வுயிர்த் துணையைக்கொண்டு ஒலிக்கின்றன வென்பதே சரியென்று உணர்வாயாக.

அ. கிருஷ்ணா! நீ சொல்வது சரியாயின், இகரமுதலிய எழுத்துகளோடு மெய்யெழுத்துகளையும் சேர்த்து ஒரே இனமாக வன்றோ இலக்கணநூல் கூற வேண்டும்? அங்ஙனம் கூறுகின்றதா?

கி. இலக்கண நூல் கூறவில்லை யென்பது வாஸ்தவமே. ஆனால் இவ்விஷயங்களிலெல்லாம் இலக்கண நூல் ஆதாரமாக மாட்டாது.

அ. கிருஷ்ணா! நல்ல உபாயம் பண்ணினாய். இவ்விதம் கூறுவாயாயின், யான் என் சொல்வது! எழுத்துகளைப்பற்றிய விஷயங்கட்கெல்லாம் இலக்கண மன்றோ ஆதாரமாயுள்ளது?

கி. அருச்சுனா! நீ "கருத்த தெல்லாம் காக்கை, வெளுத்த தெல்லாம் பால்" என்று கொள்ளும் மதியை உடையவனாயிருக்கின்றாய். இலக்கண மென்பது பிழையில்லாமற் பேசவும் எழுதவும் கற்பிக்கும் ஓர் நூலேயன்றி, எழுத்துக்களின் காரணகாரியத்தன்மையை விளக்கும் நூலாகுமா?

அ. அங்ஙனமாயின், எதனை ஆதாரமாகக்கொண்டு அதனுண்மையை உணர்வது?

கி. விவேகத்தையே ஆதாரமாகக் கொண்டோரல் வேண்டும்,

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற திருக்குறளின் பொருளை நீ யுணர்ந்திருப்பாயென நம்புகின்றேன்.

அ. நீ சொல்வதைப்பார்த்தால் இலக்கண நூல் இயற்கைக்கும் அநுபவத்துக்கும் கூட மாறாகக் கூறுமென்று எண்ணவேண்டியிருக்கின்றதே. அங்ஙனம் கூறுமா?

கி. அர்ச்சுனா! நாமதை எதுவரை உபயோகப் படுத்தலாமோ அதுவரையே உபயோகப்படுத்தல் வேண்டும். "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாம்" என்றது போல, அதனை உபயோக மில்லாத விடங்களில் உபயோகிக்கின் மாறாகத்தானிருக்கு மென்பதற்கு யாது தடை?

அ. அங்ஙனம் அநுபவத்திற்கு மாறாக இலக்கணங் கூறுவதற்கு ஏதேனும் உதாரணம் சொல்லலாமா?

கி. சொல்லலாம். எத்தனையோ இருக்கின்றன.

அ. நல்லது ஒரு உதாரண மேனுங்கூறி, விளக்கிக் காட்டுவாயாயின் நீ முன்னர்க் கூறியதும் ஒப்பத்தக்கதேயாம்.

கி. நன்று சொன்னாய். அர்ச்சுனா! எழுத்துகளின் வடிவம் எத்தனை வகைப்படும்?

அ. இரண்டு வகைப்படும்.

கி. அவை யாவை?

அ. அவை ஒலி, வரிவடிவங்களாம்.

கி. 'க்' என்னும் மெய்யெழுத்துக்கும் 'அ' என்னும் உயிரெழுத்துக்கும் மாத்திரை என்ன?

அ. மெய்யெழுத்துக்கு அரையும், உயிரெழுத்துக்கு ஒன்றுமாம்.

கி. நல்லது 'க' என்னும் உயிர் மெய்யெழுத்துக்கு மாத்திரை யென்ன?

அ. ஒருமாத்திரை.

கி. அர்ச்சுனா! பார்த்தனையா? இது உண்மைக்கு எவ்வளவு மாறாக விருக்கின்றது. 'க்' என்னும் மெய்யெழுத்துக்கு மாத்திரை அரையும் 'அ' என்னும் உயிரெழுத்துக்கு மாத்திரை ஒன்று மாயின் 'க' என்னும் உயிர் மெய்யெழுத்துக்கு ஒன்றரை மாத்திரையாக வேண்டுமே. நாமெவ்வளவு சாமர்த்தியமாய் உச்சரிக்கினும், இயற்கைப் பிரமாணந்தவறி ஒன்றரை மாத்திரை ஒரு மாத்திரை யாகாவே. பல அணுத்திரளொலி சேர்ந்ததே ஒரு எழுத்தாகலின் அரை மாத்திரை யானாலும் ஒருமாத்திரை யானாலும் அதது தன் மாத்திரை யளவில் அணுவள குறையாதன்றோ? குறையாமையால், குறைவாக ஒலித்தல் செய்தல் எவரால் கூடும்? அங்ஙனமாகவும் இலக்கணமானது ஒன்றரைமாத்திரையை ஒருமாத்திரை யாகச் சொல்லும்படி கற்பிக்கின்றது.

அ. கிருஷ்ணா! அது சரியே. ஆயினும் 'க்' என்னும் சத்தத்தோடு 'அ' என்னும் சத்தம் சேர்த்தொலிக்குங்கால் அரை மாத்திரை குன்றியதாகக் கூறினாலென்ன?

கி. எங்ஙனம் கூறலாம்? நான் சொன்னதைச் சற்று கவனித்துப்பார். 'க்' என்னும் சத்தமும் 'அ' என்னும் சத்தமும் சேர்ந்தால் அவைகளின் இயற்கைப்படி

ஒன்றரை மாத்திரை சத்திக்குமே யன்றி ஒரு மாத்திரை சத்திக்காது. ஒரு சத்தத்தில் மற்றொரு சத்தம் அடங்குமோ? இனி வரிவடிவத்தைப் பற்றிச்சிறிது ஆலோசிப்போம். 'க்' என்னும் மெய்யெழுத்தை மையினலெழுதி அதன் பேரில் 'அ' என்னும் உயிரெழுத்தை யெழுதினல்—

அ. கிருஷ்ணா! நீ அதுகூற வேண்டு மென்பதில்லை. அதில் இயற்கைக்கு விரோத மாகத்தான் இலக்கணங் கூறுகின்ற தென்பது நான் முன்னரே அறிவேன்.

கி. இப்பொழு தேனும் மெய்யெழுத்துகளின் உண்மை நிலையை யுணர்ந்தனையா?

அ. ஆம் நன்றாயறிந்தேன்.

கி. நல்லது. நீ இப்பொழுது உவமானத்தையும் உவமேயத்தையும் பொருத்திக் காட்டு பார்ப்போம்.

அ. கிருஷ்ணா! என்னே உனக்குச் சந்தேகமா? இதோகாட்டுகிறேன் பார், அகரத்தைப்போல கடவுளும மற்ற எழுத்துகளைப்போல சேதனு சேதன உலகமும் அமையும். அதாவது சகல எழுத்துகளும் ஏககனம் அகரத்தினி (அக்ஷரத்தலினி) ன்றே யுண்டாகி அதன் துணையைக் கொண்டே ஒலிக்கின்றனவோ அங்ஙனமே சேதனு சேதன உலகமும் கடவுளினின்றே உண்டாகி அவரது துணையைக் கொண்டே விளங்குகின்றது. உவமானத்தில் காரியமான எழுத்துகட்குக் காரணமான அகரம் முதன்மையாயிருக்கின்றது போல, பிரத்தியக்ஷமாய்க் காணப்படும் சேதனு சேதன உலகத்திற்கு அப்பிரத்தியக்ஷமாயிருக்குங் கடவுளே காரணமெனக் கிரகிக்கத்தக்க தென்பதே.

கி. அர்ச்சுனா! இப்பொழுது உனக்குமுதற்குறளின் அர்த்தம் விளங்கிற்றென நினைக்கின்றேன்.

அ. ஆம், நன்றாய் விளங்கிற்று.

கி. இனி "விவேக பாநு"வின் விஷயங்களைப் படிக்கத்துவக்கலாமன்றோ?

அ. ஆம், ஒவ்வொரு புஸ்தகத்திலும் உள்ள விஷயங்களை நன்றாய் வாசிக்க வேண்டு மென்றுதான் நிச்சயித்திருக்கிறேன். நான் உனக்குக் கொடுத்த சிரமத்திற்காக மன்னிக்கவேண்டும்.

கி. மன்னிப்பு! அதென்ன? ஒவ்வொருவரும் அவரவரால் இயன்றவரை மற்றவர்க்கு அறிவூட்ட வேண்டுவது கடமையன்றோ? இவ்விஷயத்தில் இவ்வளவு தூரம் சிரத்தைவைத்து வினவியதே எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. இனி மேலும் அடிக்கடி இவ்விஷயங்களில் உன்னோடு சம்பாஷிக்க மிகவும் ஆவலுள்ளவனாயிருக்கிறேன்.

அ. கிருஷ்ணா! இனி நானும் உன்னிடத்தில் அடிக்கடி வருகிறேன்.

கி. நல்லது. மிகவும் சந்தோஷம். நாம்வெகுநேரமாய்ச் சம்பாஷித்துக்கொண்டிருந்து விட்டோமல்லவா? எனது தகப்பனார் அவருடைய சிநேகிதர் ஒருவரை அழைத்துக் கொண்டு வரும்படி சொல்லி யிருந்தார். அவர் ஆபீஸிலிருந்து வருகிற நேரமும் வந்து விட்டது. நான் போகிறேன். எனக்கு விடை கொடுக்கின்றனையா?

அ. நல்லது. நானும் செல்கின்றேன். வந்தனம்.

V. A. நமசிவாயம்பிள்ளை, B. A.

REVIEWS.

Since the publication of this journal in September last, we have been regularly receiving from our American brethren who are working in the same field as we, the following valuable exchanges. With a view to acquaint our readers with the opinions of one portion of the civilized world on that sublime subject which has been engaging the serious attention of mankind ever since men have begun to think for themselves, we hope to translate their contents in the pages of our Magazine from time to time.

"MIND" by John Emery Mc Lean and Charles Brodie Patterson is a Magazine devoted to Metaphysics, Religion, Occultism etc. Every earnest enquirer after truth would find ample food for thought and reflection. The subscription is ten Shillings and can be had of The Alliance Publishing Co, Life Building, New York.

"Universal Brotherhood Path" is a Theosophical Magazine edited by Katherine Tingley and E. A. Nereshemier. It preaches from a broad platform that Gospel of the Brotherhood of Man which the nations on earth are sorely in need of, and it endeavours to show the truth that is often lost sight of by religious sectarians that the substratum of all the respectable religions of the world is almost the same, be it in beliefs or doctrines. The price per year is 10 *sh.* 10*d.* and can be had of the Theosophical publishing company, Point Loma, San Diego, Calif.

"The World's Advanced Thought and the Universal Republic" edited by Lucy. A. Mallory is a journal which elevates a reader to a higher plane of thought and her "Key Notes" are condensed truths each of which would be a proper subject for a sermon. Its annual subscription is 3 shillings which should be remitted to the Editor, 193, Sixth street, Portland, Oregan.

"Suggestive Therapeutics" edited by Sydney Flower is a Magazine of psychic research and advocates a rational treatment of healing which must command our respect and admiration. The subscription is 12 shillings per annum and can be had of the Psychic Research Co, Times Herald Building, Chicago.

"Life" is a weekly journal, edited and published by A. P. Barton and C. Josephine Barton, which presents one of the greatest religions of the world from a metaphysical point of view. Christ's teachings are clothed with a new light, and the treatment of mental healing is based upon scientific methods. Its annual subscription is 1 doller and 50 cents, and the publishing office is 3332, Troost Ave, Kansas city, Missouri.

All the journals which help us to lift the veil that is hanging between the seen and the Unseen, the known and the Unknown, confer a great boon on humanity, and they are always welcome to us.